217

# குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

50 காசு

# உணவுச் சிறப்பு

## காமதேனு வனஸ்பதியினுல்
## இன்னும் உயர்வடைகிறது

உப்பு பக்ஷணங்கள், இனிப்புப் பண்டங்கள் காமதேனு வனஸ்பதியில் தயார் செய்தால் நல்ல ருசியாய் இருக்கும். நெய் போன்றது; விலே குறைவானது.

கண்பார்வைக்குத் தேவை யானதும். சரும உபாதைகளைப் போக்க வல்லதுமான விடமின் 'A' கலக்கப் பெற்றது.

தயாரிப்பு:


மேட்டூர் கெமிகல் & இண்டஸ்டிரியல் கார்ப்பொரேஷன் லிட்.,

மேட்டூர் அணே, சேலம் ஜில்லா.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:

சேஷசாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிட்.


# சுவர்ண மாளிகை



## P.A. ராஜு செட்டியார் & பிரதர்

P-1-49 கோயமுத்தூர்

# ANNOUNCEMENT.



"TEXTOOL"

TAKES PRIDE TO ANNOUNCE
THAT THEIR 4 CYLINDER
36 To 86 H. P.
AUTOMOTIVE DIESEL ENGINES

will be out in the market Soon!!

Await Further News !!!

MANUFACTURERS:-


**Textool Company Limited,**

Post Box No. 221,

COIMBATORE.

Phone: 409
1409

Gram:
'TEXTOLCO'




VUMMIDI
RAMIAH CHETTY
GURUSWAMY CHETTY & CO.
JEWELLERS
23-25, CHINA BAZAAR ROAD
MADRAS

மலர் 16 இதழ் 3

விகாரி - ஆனி

# உள்ளுறை

பக்கம்

1. நோன்புகளின் அவசியம்
—காந்தியடிகள் 1
2. வைரங்கள்
—சி. வி. ராமன் 4
3. சீனாவின் ஓவியக்கலை
—ஜோசப் தாம்ஜான் 13
4. சமூகச் சீர்திருத்தம்
—ராஜாஜி 17
5. ரூர்க்கேலா பிலாய் ஆலைகள் 23
6. கொசு ஒழிப்பு 30
7. கொய்த மலர்கள் 34
8. அரக்குத் தொழில் 45
9. வள்ளுவர் உபதேசம்
—மு. அருணாசலம் 50
10. சரும ஆரோக்கியம்
—டாக்டர் வேங்கடேசன் 59
11. தொழிலாளர் இயக்கம் 62
12. சிறிய பண்ணைகளுக்கு அரசாங்க உதவி 66
13. புழுபூச்சி களைகாளான் ஒழிப்பு 69
14. கட்டிடக் கலை
—எல். எம். சித்தாலே 74
15. லண்டன் தானியச் சந்தை 78

# நோன்புகளின் அவசியம்

காந்தியடிகள்

நோன்புகளின் அவசியத்தைப் பற்றி நான் பல இடங்களில் சொல்லியிருக்கிறேன். இங்கு தெய்விக வாழ்வு நடத்த, அவை எவ்வளவு தூரம் இன்றியமையாதவை என்பதை ஆராய்வோம்.

சிலர் நோன்புகளே அவசியமில்லை என்று சொல்லுகிறார்கள். நல் வாழ்க்கைக்குச் சில விதி முறைகள் அவசியமேயாயினும், என்ன நேர்ந்தாலும் அவற்றை அனுஷ்டிப்பதென்று பிடிவாதம் செய்வது பலவீனத்துக்கே அறிகுறியாகும் என்றும், நெருக்கடியான சமயத்தில் விதிவிலக்குகள் ஏற்படுத்திக் கொண்டால்தான் மனக் கோளாறுகள் ஏற்படாவென்றும் அவர்கள் நினைக்கிறார்கள். உதாரணமாக, மதுபானத்தால் பொதுவாகக் கெடுதியே விளையும் என்றாலும், மதுவை மருந்தாகச் சில சமயங்களில் உபயோகிப்பதில் குற்றமில்லை என்பதும், மற்ற விஷயங்களிலும், இதைப்போலவே அனுவசியமான கட்டுப்பாடுகள் இன்றி வாழவேண்டும் என்பதும் அவர்கள் கருத்து.

நான் அப்படி நினைக்கவில்லை. ஆராய்ந்து தெளிந்த உண்மைகளை என்ன நேர்ந்தாலும் கடைப்பிடிப்பதென்று நோன்பாகக் கொண்டதால்தான் கீழ்நிலைக்குப் போகாமல் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். எடுத்த காரியத்தில் அசௌகரியம் ஏற்படும்போது, வளைந்து

கொடுப்பதைத் மனவுறுதி என்று எப்படிச் சொல்லுவது? காரியத்தில் வெற்றி பெறவேண்டுமானால், தயக்கமின்றி உறுதியாக நிற்க வேண்டும். சந்தேகத்துக்கு இடமான காரியங்களை நோன்பாக ஏற்றுக்கொள்ளக் கூடாது. முதலில் சிறந்ததாகத் தோன்றிய விஷயம், பின் ஆராய்ந்ததில் பாவ காரியமாகத் தென்பட்டால், அதை உடனே விட்டுவிட வேண்டும். அப்படி விடாமல் பிடிவாதம் செய்வது தவறு. உயர்ந்த கொள்கைகளை உறுதியுடன் கடைப்பிடிப்பதால், யாருக்கும் கெடுதி நேராது. கேடு நேர்வது போலச் சில சமயங்களில் தோன்றும்; அதில் மயங்கி விடலாகாது, உதாரணமாக, மருந்துக்காக ஒருவன் மது உண்டால் தாற்காலிக சாந்தி ஏற்படலாம். ஆனால் அதனால் மரணத்தைத் தடுக்க முடியாது. உயிர் போனாலும் மது உண்பதில்லை என்ற உறுதியுடன் ஒருவன் இருந்தால், அவனைப் பார்த்து எத்தனையோபேர் நல்வழிப்படுவார்கள். உலகத்தில் நன்மை ஓங்க அவன் ஒரு சக்தி நிலையமாக இருப்பான். இப்படி உயிரையும் பொருட்படுத்தாமல் திட நம்பிக்கையுடன் நோன்புகளைச் செய்பவனே காலக்கிரமத்தில் கடவுள் தரிசனம் பெறுவான்.

நோன்புகளை மேற்கொள்வது பலவீனத்துக்கு அறிகுறி என்பது பொய். வலிமையுள்ளவர்களே நோன்புகளை ஏற்க முடியும். செய்யக் கடமைப்பட்ட காரியங்களைக் கண்ணும் கருத்துமாக இருந்து, என்ன நேர்ந்தாலும் செய்து முடிப்பதுதான் நோன்பு என்பது. அந்த உறுதியே நமக்கு அரண் செய்யும். 'முடியுமான மட்டும்' ஒரு காரியத்தை ஏற்றுக்கொண்டால், தொட்க்கத்தில் ஏற்படும் கஷ்டங்களே நம்மை அழித்துவிடும். பணம் கடன்வாங்க விரும்புவன், குறித்த தேதியில் "கூடுமானால்" திரும்பத் தருகிறேன் என்றால், அவனை நம்பி யார் பணம் தருவார்கள்? அது போலவே "கூடுமான

மட்டும்" சத்திய நெறியில் நிற்பதாகச் சொல்லுபவனுக்கும் கடவுள் அருள் கிடையாது.

கடவுளே நோன்புகளின் உருவம். அவர் தாம் இட்ட விதிகளினின்றும் நூலிழை கூடப் பிறழுவது இல்லை. ஏக நிஷ்டையான நோன்புகளைச் செய்வதில் சூரியனுடைய பெருமையை நாம் கண்ணால் பார்க்கிறோம். அவர் நியமப்படி நடப்பதால்தான் அவரை ஆதாரமாகக் கொண்டு நேரத்தை அளக்கிறோம்; பஞ்சாங்கம் கணிக்கிறோம். நியமப்படி நடப்பது சாதாரண விவகாரங்களுக்கே அவசியமாக இருக்கிறதென்றால், ஆத்ம முன்னேற்றத்துக்கு அது எவ்வளவு அவசியம்? நாம் உயர்ந்த நோன்புகளை ஏற்று நடப்பதன்மூலம் ஆத்ம சுத்தியும் ஆத்ம தரிசனமும் பெறுவோமாக.

# வைரங்கள்

சி. வி. ராமன்

(சர் சி. வி. ராமன், லண்டன் சர்வகலாசாலையில் சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்த்திய உரை.)

வைரங்கள் சுலபமாகவும் விலை சரசமாகவும் கிடைத்தால், காப்பிக் கோப்பைகளும், சமையல் சாமான்களும் செய்யலாம்! பீங்கான் பாத்திரங்களைக் காட்டிலும் பார்வைக்கு அவை அழகாக இருப்பதோடு, விரைவில் உஷ்ணத்தைக் கிரகிக்கும்.

வைரங்களின் இயற்கைப் பண்புகளையும், ரசாயன குணவிசேஷங்களையும் ஆராய்வதில் நான் கடந்த ஏழு, எட்டு ஆண்டுகளைச் செலவழித்தேன். வைரங்களின் உபயோகத்தை முதன் முதலில் அறிந்து அதை உபயோகப்படுத்திய தனிப் பெருமை இந்தியாவுக்கு மட்டுமே உரியது. பண்டைகாலத்தில், நெடுந்தொலைவிலிருந்து, ரோமாபுரியிலிருந்து கடல் கடந்து வந்து இந்திய வைரங்களை வாங்கிச் சென்றனர். இந்த உண்மை, 1925-ஆம் ஆண்டு, ருஷ்ய விஞ்ஞானக் கழகத்தின் அழைப்பிற்கு இணங்கி ருஷ்யா சென்றிருந்தபொழுது, எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. அப்பொழுது கிரெம்லினுக்குச் சென்றிருந்தேன். அங்கு, பிரகாசமான வைர, வைடூரிய, கோமேதகக் கற்களை வைத்திருந்தார்கள்.

அவற்றின் நடுவில் இருந்த காதரைன் மகாராணியின் வைரமுடி பிரகாசித்தது. அந்தப் பெரிய முடியில்

வைரங்களும், மாணிக்கங்களும், கோமேதகங்களும் பதிக்கப்பட்டிருந்தன. அந்த வைரமுடியின் அழகை ரசிப்பதை விட, அதில் பதிக்கப்பட்டிருந்த வைரங்களின் தன்மையையும், அந்த இந்திய வைரக் கற்கள் எப்படி ருஷ்யாவுக்குச் சென்றன என்ற ஆராய்ச்சியிலும் ஈடுபட்டது என் மனம். அந்தக் கிரீடத்தைக் கையில் வைத்திருந்த பொழுதும், அதைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த பொழுதும் படம் எடுத்த ஒரு காமிராக்காரர் அதை என் தலையில் வைத்துக் கொள்ளச் சொன்னார். முடியாது என்று தலையை அசைத்துவிட்டேன். அதற்குமுன் அதை அணிந்தவர்களின் கதியை அடைய நானும் விரும்பவில்லை!

உலகத்துக்கே இந்தியாதான் வைரங்களை விற்றது. பிறகு உலகத்தின் பல்வேறு பாகங்களில் குறிப்பாக பிரேசில், தென் ஆப்பிரிக்கா போன்ற இடங்களிலும் வைரங்கள் கிடைக்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டவுடன், உலகத்தின் வைரவியாபாரி என்ற இந்தியாவின் தனிப் பெருமை மங்க ஆரம்பித்துவிட்டது.

கொஞ்ச நாளைக்கு முன் சர் கிரிப்ஸ், "எலிசபெத் இளவரசிக்குப் பரிசாக வந்திருக்கும் ஊதா வைரக்கல்லை நீங்கள் பார்க்கவேண்டும். அதைப் பார்க்காத வரையில் நீங்கள் ஒரு வைர ஆராய்ச்சியாளர் என்று சொல்லிக் கொள்ளமுடியாது" என்றார். ஊதா வைரக்கல் புதிதல்ல. என்னிடமே அவ்வளவு பெரிதாக இல்லாவிட்டாலும் ஒன்று இருக்கிறது. உலகமெங்கும் வைரச் சுரங்கங்கள் தோண்டப்படுகின்றன. என்றாலும் இந்தியாவில் இருக்கும் சுரங்கங்களில் கிடைக்கும் வைரங்களின் குணமே தனிச் சிறப்பு வாய்ந்தது. சமீபகாலமாக வட இந்தியாவில் பாலம் என்ற இடத்தில் வைரக்கற்கள் கிடைக்கின்றனவாம்.

இயற்கையில் கிடைக்கும் வைரங்கள் பார்ப்பதற்கு அவ்வளவு அழகாக இருக்காது. பட்டை தீட்டாத வைரங்களை நம் முன்னோர்கள் காதில் அணிவது வழக்கம். இப்பொழுதுதான் தலைப்பாகை அணிவதே அநாகரிகம் என்றாகி வருகிறதே!

வைரம் அணிகலமாக உபயோகப்படுவதைப்பற்றி நான் சொல்லப் போவதில்லை. மக்கள் ஏன் நகை நட்டுகள் போட ஆசைப்படுகிறார்கள் என்பது மனித வரலாற்று நிபுணர்கள் ஆராயவேண்டிய விஷயம்.

ஆனால், தென்னிந்தியப் பெண்மணிகள் வைர நகைகள் அணிய ஏன் ஆசைப்படுகிறார்கள் என்பதைப் பற்றி என்னுடைய சொந்த அபிப்பிராயம் ஒன்று இருக்கிறது. அவர்களுடைய கருநிற மேனிக்கு அழகு செய்கின்றன இந்த ஊதா வைரங்கள். தங்களுடைய நிறத்தின் குறைபாட்டை நிவர்த்தி செய்யவே அவர்கள் வைரத்தின் உதவியை நாடுகின்றனர். பெண்கள் அணிந்திருக்கும் வைரங்களைப் பார்க்கும் கண்கள் கூசுகின்றன. (மிகப் பிரகாசமான வஸ்துவைப் பார்க்க மனிதக் கண்கள் கூசுவது இயற்கைதானே) ஒளிமிக்க வைரங்களினின்று கண் பார்வையை அவற்றை அணிந்திருப்பவர்கள்மேல் திருப்பவேண்டிய அவசிய மேற்படுகிறது.

பெண்கள் வைரங்கள் அணிவதன் காரணம், தாங்கள் அணிந்திருக்கும் வைர நகைகளைப் பிறர் பார்க்கவேண்டுமென்பதற்காக அல்ல! பிறர் கண் பார்வையை வைர ஒளியின் உதவியால் இழுத்துத் தங்களைப் பார்க்கச் செய்ய வேண்டும் என்பதுதான், வைரங்கள் பெண்களின் அழகுக்கு அழகு செய்து, அவர்களுடைய தோற்றத்துக்கு அழகான பின்னணியாக விளங்குகின்றன.

இயற்கையில் கிடைக்கும் வைரக் கற்களுக்கும் கடைகளில் வைத்திருக்கும் கற்களுக்கும் சம்பந்தமே இல்லே, கடைகளில் விற்கப்படும் வைரம் பட்டை தீட்டப்பட்டு. மெருகேற்றப்பட்டது. முதலில் இயற்கையில் கிடைத்த வைரத்தை அப்படியே அணிந்து கொண்டார்கள். பிறகு எவனே ஒருவன் வைரங்களே உடைக்கலாம் என்று என்று கண்டுபிடித்தான். பிறகு வைரக்கற்களேக் கண்ணுடிச் சில்லுகளேப்போலத் தகடுகளாக வெட்டி, அவற்றைத் தங்கத்தில் பதித்தார்கள். அவை பார்ப்பதற்குக் கண்ணுடியிட்ட ஜன்னல் கதவுகளேப்போல இருக்கும்.

அம்மாதிரியான நகைகள் ஒரு பெட்டி நிறைய இருந்ததைப் பார்த்திருக்கிறேன். நவநாகரிக நகைகளேப்போல 'டால்' பளபளப்பாய் இல்லே. ஆனுல் அந்த அழகு, படாடோபமற்றுக் கவர்ச்சிமிக்கதாய் இருந்தது. இயற்கை வைரங்களுக்கு இப்பொழுது மதிப்பு இல்லே, இயற்கை வைரத் தகடுகளுக்கு விஞ்ஞானிகளிடையேதான் கிராக்கி அதிகம்.

சில சமயங்களில் ஆராய்ச்சி செய்வதற்காக என் பணக்கார நண்பர்களிடத்திலிருந்து வைரங்கள் வாங்கி வருவேன். அவர்கள் கொடுக்கும்பொழுது அரை மனத்துடன், திரும்பி வருகிறபொழுது வைரமாகத்தான் வரப் போகிறதோ அல்லது வைரத்தின் தாயாகிய கரித்துண்டாக வரப் போகிறதோ என்ற மனச் சஞ்சலத்துடன், சந்தேகப் பார்வையுடன் கொடுப்பார்கள். பரிசோதனே செய்ய நண்பர்களிடம் இரவல் வாங்குவதைக்காட்டிலும், விலேக்கு வாங்குவதுதான் தொந்தரவில்லாதது என்று என் அனுபவம் கூறுகிறது.

வைரங்கள் தட்டையாக, தகடுபோல் இருந்தால்தான் ஆராய்ச்சி செய்வது சுலபம். இதனுல் இயற்கையில்

கிடைக்கும், ஸ்படிக ரூப வைரக் கற்கள் பரிசோதனைக் குத் தகுதியற்றவை என்று அர்த்தமல்ல. இயற்கை வைரங்களை அவற்றின் உருவத்தில் பரிசீலனை செய்வதில்தான் ஆராய்ச்சியின் முழு சிரத்தை இருக்கிறது. இயற்கை வைரங்களைப் பரிசோதனை செய்யும் வாய்ப்பு எனக்கு நிறையக் கிடைத்திருக்கிறது. அதுவும் இந்திய வைரங்களே ஒரு தனி ரகம்! உலகத்தின் பல்வேறு பாகங்களில் கிடைக்கும் அந்த வழக்கமான ஸ்படிக உருவில் மட்டும் கிடைப்பதில்லை. எல்லாவித உருவங்களிலும், பலவித பரிமாணங்களிலும் கிடைக்கின்றன. மிகச் சிறிய வைரக்கல் ஒரு நீர்த் துளி மாதிரி இருக்கிறது!

இந்திய சமஸ்தான மன்னர்களில் ஒருவர் ஒரு வைர மாலை வைத்திருக்கிறார். அந்த வைரமாலை இயற்கை வைரங்களால் ஆனது. வைரக்கற்களை தங்கத்தில் பதிக்காமல் அப்படி மாலைபோல் தங்கச் சங்கிலியில் தொடுக்கப் பட்டிருக்கிறது. நான் ஒருமுறை அந்த வைரக்கற்களைப் பார்த்தேன். என்ன அழகான சேமிப்பு! இந்தியாவில் கிடைத்த வைரங்களிலேயே தலைசிறந்தவை அவை.

இந்த வைரமாலையைப் பற்றி ஒரு கதைகூட வழங்கி வருகிறது. ஒரு சமயம் வைஸ்ராய் அந்த மன்னரைப் பார்க்கச் சென்றிருந்தாராம். அந்தச் சமயம் வைஸ்ராய், மன்னரை அந்த மாலையை அணியும்படி கேட்டுக் கொண்டாராம். அதற்கு, "இவ்வளவு அழகான மாலையைக் கேவலம் மனிதனா அணிவது?" என்று சொன்னாராம் மன்னர்.

ஸ்படிக உருவில் கிடைக்கும் வைரங்கள், வைரத்தின் வரலாற்றில் இரண்டாம்படி. அவை தோன்றி இன்றைக்கு 10 கோடி வருஷங்களா, அல்லது 100 கோடி வருஷங்களா என்பதில் தான் சர்ச்சை. எப்படியிருந்தாலும்

குறைந்தது 10 கோடி வருஷங்களாவது இருக்கும். அந்த ஸ்படிக உருவம் இத்தனை வருஷங்களாகியும் குலையாமல் இருக்கிறது! பூமியில் உள்ள அநேக ரசாயனச் சத்துக் களும், மற்றப் பொருள்களும் அந்த வைரங்களைப் பாதிக்க வில்லை!

இயற்கை அன்னை நமக்காகத் தயார் செய்து தரும் இந்த அரும் பெரும் பொருளை விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சிக் கூடங்களிலேயே கண்டுபிடிக்க முயற்சி செய் திருக்கிறார்கள். முயற்சியில் வெற்றியும் பெற்றிருக் கிறார்கள்.

குயூரி அம்மையார்கூட, செயற்கை வைரங்கள் செய்ய ஒரு நூதன வழியைக் கண்டுபிடித்துள்ளார். அந்த முறையைக் கையாண்டு, அணுக்குண்டு செய்து ஒன்று மறியாத பாமர மக்களின் தலைகளில் போட்டு, அவர்கள் இருந்த சுவடு தெரியாமல் அழிப்பதைக் காட்டிலும், ஒரு மலைக் குகையில் நிலக் கரியை அடைத்துவிட்டு, அணுச் சக்தியைப் பாய்ச்சினால், மனிதர்கள் அழியமாட்டார்கள், நாடு நகரங்கள் தரைமட்டமாக மாட்டா. அந்தச் சுரங்கம் ஒளி வீசும் வைரக்கற்கள் நிறைந்ததாக இருக்கும்.

பங்களூரில் இருக்கும் என்னுடைய ஆராய்ச்சிக் கூடத்துக்கு வருகிற நண்பர்கள், "வைரங்களை வைத்துக் கொண்டு என்ன ஆராய்ச்சி செய்கிறீர்கள்? உங்களுக்கு வைரம் செய்யத் தெரியுமோ?" என்று கேட்கிறார்கள். மனிதனுக்கு என்ன ஆசை! அதைத் தடுக்கமுடியுமா? விஞ்ஞானிகள் செயற்கை முறைப்படி கண்டுபிடித்துள்ள கெம்புகளும் (சிவப்பு வைரம்) எவ்வளவுதான் அழகாக இருந்தாலும் நகல் நகல்தானே. அசலுக்கு ஈடுவருமா? செயற்கைமுறையில் தயார் செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட எடையுள்ள வைரக் கல்லை காட்டிலும் அதே எடையுள்ள

அசல் வைரம் எத்தனையோ மடங்கு விலை அதிகம் பெண் கள் கூடச் செயற்கை வைரத்தை விரும்புவதில்லை!. செயற்கை வைரங்களை உற்பத்தி செய்தால் அதை வாங்க ஒருவரும் முன்வரமாட்டார்கள். அதைத் தெருவுக்குக் கப்பிக் கல்லுக்குப் பதிலாக உபயோகப்படுத்தலாம்!

வைரக்கற்கள் தொழிற்சாலைகளில் அதிகம் உபயோ கிக்கப்படுகின்றன. வைரம், ரேடியோக்களில் உபயோகப் படுகிற 'வால்'வின் மெல்லிய கம்பிகள் இழுக்க உபயோ கப்படுகிறது.

வைரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய நான் முற்பட்ட தற்குக் காரணம்,எனக்கு இருவிதத்தில் அந்த ஆராய்ச்சி பயன்படுவதுதான். முதலாவதாக ரசயான சாஸ்திரத் தைப் படிக்க வாய்ப்புத் தருகிறது. இரண்டாவதாக திடப் பொருள் சாஸ்திரத்தைப் பற்றியும் நன்கு அறிய முடிகிறது. வைரத்தை உலகத்திலுள்ள திடப் பொருள் களின் பிரதிநிதி என்றே கொள்ளலாம். அதன் குணாதி சயங்களை வைத்துக் கொண்டே உலகத்தில் உள்ள திட வஸ்துக்களின் தன்மைகளை ஒருவாறு அறியமுடிகிறது.

வைரங்கள் எல்லாமே ஒரே குணமுடையவை என்று சொல்ல முடியாது. இரண்டு ஜெர்மன் விஞ்ஞானிகள், வைரங்கள் மின்சார சக்தியைக் கிரகிக்காது என்று கண்டுபிடித்தனர். ஆனால், வைரக்கற்களில் வெளிச்சத் தைச் செலுத்தினால்—குறிப்பாக ஊதா வெளிச்சத்தைச் செலுத்தினால்—மின்சாரம் அவற்றின் மூலம் பாய்கிறது.

என்னிடத்தில் ஒரு பிரமாதமான வைரக்கல் இருக் கிறது. அதற்கு 'என் கோஹிநூர்' என்று பெயர் வைத் திருக்கிறேன். அதைப் பெற நான் சுமார் 1500 ரூபாய்

தான் செலவு செய்திருப்பேன். அதன் இயற்கை ஒளி ஊதா. ஆனால் ஊதாநிறக் கிரணங்களை அதன் மீது பாய்ச்சினால், அதன் நிறம் பச்சை கலந்த மஞ்சளாக மாறுகிறது.

ஒரு சிறு வைரக்கல்லை வைத்துக்கொண்டே வைரக் கற்களின் பொதுவான குணாதிசயங்களைக் கண்டு பிடிக்கலாம். என்னுடைய ஒரு மாணவன்தான் வைரங்களின் மீள் சக்தியைக் (Elastic Canstant) கண்டுபிடித்தான். இம்மாதிரியான ஆராய்ச்சிகளினால் என்ன பலன் கிட்டப் போகிறது என்று கேட்கலாம். இவையெல்லாம் விஞ்ஞான முன்னேற்றத்துக்கு அவசியம் என்று சொல்லவும் வேண்டுமா?

வைரங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து சில உண்மைகளைக் கண்டுபிடிப்பது, மற்ற ஸ்படிக வர்க்கங்களின் தன்மைகளைப் பற்றி அறிய உபயோகமாயிருக்கும். திடப் பொருள்களைப் (Solids) பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களுக்கு வைரம் வழிகாட்டியாக இருக்கும்.

என்னுடைய மாணவன் என்னை ஒருமுறை "ஒரு வஸ்து எப்படி ஒரே சமயத்தில் விதி விலக்காகவும் மற்றத் திடவஸ்துக்களின் பிரதிநிதியாகவும் இருக்கமுடியும்?" என்று கேட்டான்.

"நீ ஒரு பௌதிக சாஸ்திரி அல்ல. நீ ஓர் அரசியல்வாதி. ஆகவே உனக்கு ஓர் அரசியல் உதாரணத்தின் மூலம் விளக்குகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பின்வருமாறு கூறினேன்:

"இந்தியாவில் உள்ள மனிதர்களிலேயே விதிக்கு விலக்காக நிற்கிறார் மாகாத்மா காந்தி. எப்படியென்றால், அவர் தாம் அரையில் உடுத்தியுள்ள வேட்டியுடனேயே உலகம் முழுவதும் சுற்றுவார். அம்மாதிரி நீயும் நானும் செய்யமுடியாது. அதே சமயத்தில், அவர் இந்திய மக்களின் பிரதிநிதியாக விளங்கினார். அவர் சொன்னதைப் பிரிட்டிஷ் அரசாங்கம்கூடக் கேட்டது. நீயும் நானும் சொன்னால் கேட்குமா, அந்த அரசாங்கம்?"

———

# சீனுவின் ஓவியக்கலை

**ஜோஸப் தாம்ஜான்**

*[தாம்ஜான் என்னும் ஹங்கேரிய ஓவியக் கலைஞர் எழுதிய கட்டுரை இது. அவர் செஞ்சீனுவில் பல இடங்களுக்குப் போய் நேரில் கண்டறிந்தவற்றை இந்தக் கட்டுரையில் எழுதியிருக்கிறார். அவர் 1907-ல் பிறந்தவர். மரத்தில் அரிய சித்திரங்கள் செதுக்கி அகில உலகப் புகழ் பெற்றவர். அவர் செதுக்கிய சித்திரங்களை ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும். சீனுவிலும் பொருட்காட்சி சாலைகளில் காணலாம். புதிய சீனுவில் தாம் கண்டவற்றை இக் கட்டுரையில் அவர் கூறுகிறார்.*

மரத்தில் நான் செதுக்கிய வர்ண ஓவியங்கள் காட்சியில் வைக்கப்பெற்றன. 1955-ஆம் ஆண்டில் புடாபெஸ்டில் ஏர்னெஸ்ட் காட்சி சாலையில் தனி ஒருவனுக நான் நடத்திய இந்தக் காட்சியைப் பற்றி அறிந்த சீனு,எனக்கு அழைப்பு விடுத்தது. சீனுவுக்கு நான் நூறு ஓவியங்கள் கொண்டு போனேன். அவற்றை முக்கிய நகரங்களிலும் கலைக்கூடங்களிலும் காட்சியரங்குகளிலும் பொருட்காட்சிக்கு வைத்தேன். நாடு முழுவதும் பிரயாணஞ் செய்தேன். பெரும்பாலும் சீன மொழிபெயர்ப்பாளர் ஒருவருடனேயே பிரயாணம் செய்தேன். ஓவியக் கலைஞர் பலரைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

ஆறு மாதம் சுற்றுப் பிரயாணம் செய்தேன். சீன அரசாங்கம் எனக்குப் பட்டங்கள் வழங்கியது. அங்கேயே

நான் ஐந்தாண்டு தங்கி, நல்ல ஊதியம் பெற்று, ஓவியம் பயிற்றுவிக்க ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டுமென்று அரசாங்கம் என்னைக் கேட்டது.

சீனுவின் அழைப்பை ஏற்றுக் கொள்ளவும், பாஸ் போர்ட் முதலியவை பெற்றுக் கொள்ளவும் ஏழு மாதங்கள் ஆயின. வெளிநாட்டுப் பிரயாணங்கள் எல்லாவற்றையும் பண்பாட்டு உறவு நிலையமே ஏற்பாடு செய்ய வேண்டும். பிரயாணம் செய்பவருக்கு அவர் புறப்படுவதற்கு முந்தின நாள்தான் அது பற்றிச் சொல்லப்படும். விமானத்தில் அல்லது ரயிலில் ஏறும்போதுதான் பிரயாணம் செய்பவர் தாம் இன்னுர் என்பதைக் காட்டும் அட்டையைக் கொடுத்து, 'பாஸ்போர்ட்' பெற்றுக்கொள்ள வேண்டும். வெளிநாட்டுச் செலாவணி எதுவும் அவருக்குக் கொடுக்கப்படுவதில்லை. அவரது தேவைகள் அனைத்தையும் அழைத்தவர்கள் கவனித்துக் கொள்வார்கள் என்று கருதுகிருர்கள்.

நான் பீக்கிங் சேர்ந்தபோது வெப்பம் 100 டிகிரிக்கும் அதிகமாக இருந்தது. அங்குள்ள பண்பாட்டு நிலையத்தைச் சேர்ந்த எட்டுப் பேர் கொண்ட ஒரு குழுவும் ஓவியக் கலைஞர் சிலரும் என்னை வரவேற்றனர். வெளிநாட்டாருக்கான புதிய ஹோட்டலில் நான் தங்க ஏற்பாடாயிற்று.

இன்று சீனு தன் மக்களுக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுக்கப் பெரு முயற்சி செய்கிறது. ஆனுல் பள்ளிக்கூடங்கள் மிகவும் குறைவாக உள்ளன.

மாலை வகுப்புகள் ஏராளமாக நடைபெறுகின்றன. ருஷ்யாவின் சார்பு நாடுகளைச் சேர்ந்த சுமார் 1,000 நிபுணர்கள் ஒவ்வொரு ஆண்டும் சீனுவுக்கு அழைக்கப்படுகிருர்கள்.

சூச்செள பட்டு நெசவுக்குப் பேர் போன இடம். மார்க்கோ போலோ காலத்தில் நெசவு செய்தது போலவே, இன்னும் அவர்கள் நெசவு செய்கிறார்கள். பழங்காலத்து அழகுமிக்க பீங்கான் சாமன்களை இப்பொழுது செய்யவில்லை.

அழகிய வர்ணம் பூசிய பொருள்கள் இன்னும் சீனுவில் உள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சீனக் கலை அது.

சீனுவிலுள்ள சாதாரண மக்கள் கலையுள்ளம் படைத்தவர்களே. அவர்கள் வீடுகளில் அதனைக் காணலாம். பூக்களையும் பூங்கொத்துக்களையும் கொண்டு அவர்கள் தம் வீடுகளை அலங்கரிக்கிறார்கள்.

ஓவியம் தீட்டுவதைத் தொழிலாகக் கொண்ட முற்காலத்துக் கலைஞர் பழங்காலத்து நுட்பங்களைக் கருத்தாய்க் கையாண்டனர். புதுமையாக ஏதேனும் ஒன்றை அவர்கள் படைக்கவேண்டும் என்று யாரும் விரும்பியதுமில்லை, எதிர்பார்த்ததுமில்லை.

சீன ஓவியக் கலைத்துறையில் இக்காலத்தில் பெரும் புகழ்பெற்றவர் சிபால்—ஷி என்பவர். நான் அவரைப் பார்த்தபோது அவருக்கு வயது 98. அவரையும் அவர் வரைந்த ஓவியங்களையும் விளம்பரப்படுத்த சீன அரசாங்கம் முனைந்து நிற்கிறது. அவர் தீட்டிய ஓவியங்களை ஏராளமாக அச்சிட்டு விற்கிறது சீன அரசாங்கம்.

குயுவான் என்பவர் வேறு ஒரு கலைஞர். சிபாய்—ஷி என்பவர் பழங்காலத்து ஓவியர் என்று கம்யூனிஸ்டுகள் கருதியபோதிலும் அவரைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்; ஆனால் குயுவான் என்பவரை அவர்கள் தற்காலக்

கலைஞர் என்று போற்றுகிறார்கள். அவரோ கலைத் துறையில் புதுமை ஒன்றும் புகுத்தியவர் அல்லர். கட்சிக் கொள்கைகளைப் பரப்ப அவரைப் பயன்படுத்துகிறார்கள். அவருடைய கலைப் படைப்புகளைப் பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டு நாடு முழுவதும் பரப்புகிறார்கள்.

கு யுவானின் முறையையே பின்பற்றவேண்டுமென்று ஓவியப் பள்ளிகளில் வற்புறுத்துகிறார்கள். இந்த இரண்டு கலைஞர்களும் சீன ஓவியக் கலையின் இன்றையப் பிரதிநிதிகளாக விளங்குகின்றனர். ருஷ்ய முறையைத் தழுவித் தீட்டப்பட்ட எண்ணெய் ஓவியங்கள் பழங்காலச் சீன ஓவியங்களின் சிறப்புள்ளவைகளாக இல்லை. அவ்வாறிருந்தும் சீனக் கலைஞர்களை எண்ணெய் வர்ணங்கள் தீட்ட வேண்டுமென்று வற்புறுத்துகிறது சீன அரசாங்கம்.

வேற்று நாட்டு முறைகள் கட்டாயமாகத் திணிக்கப் படுவதால், சீன ஓவியக் கலையின் பழங்கால மாண்பு குலைந்து வருகிறது. கலையுள்ளம் படைத்தவர்களுக்கு இது தெரியும். சீனாவின் சென்ற காலத்தை நோக்கி பண்பாடு, இலக்கியம், தத்துவம் முதலியவற்றிலுமுள்ள தன் பழமையான செல்வத்தைச் சீனா செம்மையாக ஆராய்ந்து, அதில் நல்லனவற்றைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த வேண்டும்.

# சமூகச் சீர்திருத்தம்

ராஜாஜி

சமூகச் சீர்திருத்தம் நல்லது, அவசியம் கூட. ஆனல் அதைச் செய்யும் பொழுது நாம் துவேஷம், கோபம் முதலியவைகளை அறவே துறந்து விடவேண்டும். சீர் திருத்தத்தில் மட்டுமே நாம் கண்ணும் கருத்துமா யிருக்க வேண்டும். இந்த விஷயத்தில் நாம் நம்முடைய பெரு மையைப் பொருட்படுத்தலாகாது. உலகமும், நாகரிகமும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. நானே நீங்களோ ஏதோ பிரமாதமாகச் செய்து சாதித்துவிடப் போவதாக எண்ணி விடலாகாது. ஒவ்வொருவரும் தத்தம் வழியில் சமூகச் சீர்திருத்தத்துக்குச் சேவை செய்ய இடங் கொடுத்து விடவேண்டும். ஒருவர் கையாளும் முறையில் மற்றவர்கள் தலையிடலாகாது. இந்த விஷயத்தில் ஒவ் வொருவரும் தத்தம் மனத்துக்கும், திறமைக்கும் உகந்த விதத்திலேசேவைசெய்வதே நல்லது. இதுபற்றி எல்லோ ரும் பின்பற்றவேண்டிய பொது விதி யாதெனில், எந்த முறையைக் கையாண்டாலும் நல்லெண்ணத்துடனேயே செய்யவேண்டும் என்பதேயாகும்.

எது அதிக முக்கியம், எது அதிக முக்கியமில்லை என்று நாம் சண்டையிடலாகாது. மழை பெய்தால் அநேக விதமான செடிகள் முளைக்கின்றன. அது போல் ஜன சமூகத்தில் புதிய உயிர் தோன்றும்பொழுது அநேக விதமான காரியங்கள் நடைபெற ஆரம்பிக்கின் றன. எதை முதலில் செய்ய வேண்டும் என்பது பற்றி

நாம் ஒருவருக்கொருவர் வாதாடிக்கொண்டிருக்கலாகாது. அவரவர் மனத்திற்குப் பிடித்த நல்ல காரியத்தைச் செய்ய லாம். தேசம் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டுக் கொண் டிருந்த பொழுது, தாகுர் கவிகள் இயற்றிக் கொண்டிருந் தாரே என்று அவர் விஷயத்தில் தலையிடலாகாது. அது போல் சி. வி. ராமன் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட வேண்டியதை விட்டு விட்டு, அணுசக்தி சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தாரே என்று அவரிடம் சண்டையிடக்கூடாது. மழைபெய்வது போலவும் வெயில் காய்வது போலவும் சகல விதமான காரியங்களும் நடை பெற வேண்டியனவே. ஒவ்வொருவரும் அவரவர் சக்திக்கு உகந்தவண்ணம் சேவை செய்ய விட்டுவிட வேண்டும்.

தாம் செய்யும் காரியம்தான் முக்கியமானது என்று ஒவ்வொருவரும் கர்வம் கொள்வது இயல்பு. அப்படி நாம் கர்வம் கொள்வோமானால், பிறர் கர்வத்திற்கு ஏன் பங்கம் விளைவிக்க வேண்டும்? ரயில்வண்டி ஓடும்பொழுது அதி லுள்ள ஒவ்வொரு பகுதியும் அதிர்ச்சியடைகின்றன. அதைக்கண்டு சக்கரமானது மற்றப் பகுதிகளைப் பார்த்து "இதோ பாருங்கள், நீங்கள் ஏன் அதிர்கிறீர்கள்! நான் தானே வண்டியை இழுத்துச் செல்கிறேன்" என்று கேட்கலாமோ?

நான் எச்சரிக்கை கூறவேண்டிய மற்றொரு விஷ யம் இது:—குற்றங் குறைகளைக் கண்டுபிடி; ஆனால் மக் களை மட்டும் தாக்காதே. குற்றங்களை எடுத்துக் காட்டு; ஆனால் யாரையும் வையாதே. போன ஜன்மத்தில் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கவாறு மக்களைக் கடவுள் சிருஷ்டிக்கிறார். அத்துடன் அவர்கள் பிறந்து வாழும் சூழ்நிலைக்குத் தக்கவாறு மாறுதல்களும் அடைகின்றனர்.

அதனால் நாம் எல்லோரிடமும் இரக்கமுடையவர்களா யிருக்க வேண்டும். அதை மனத்தில் வைத்துக் கொண்டு குறைகளை மட்டும் தாக்கவேண்டுமேயன்றி குறையுடைய மக்களைத் தாக்கலாகாது என்று எண்ணிக் காரியம் செய் தால் மட்டுமே நாம் எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவோம். மக்களைத் தாக்குவதில் மகிழ்ச்சி காண்போமானால், எதிர்ப்பும் சண்டை சச்சரவு களுமே சிருஷ்டி செய்து கொள்வோம். நாம் கூறும் வேறு பாடு வெகு நுண்ணியதாகத் தோன்றலாம். ஆனால் இந்த வேறுபாட்டை நினைவில் வைத்துக் கொண்டு, மக்களை மறந்து சீர்திருத்தம் மட்டுமே செய்வோமானால் நம்முடைய சேவை வெகுவிரைவில் பலன் தரும்.

பிறர் என்னை வைதால், நானும் அவர்களை வைய வேண்டுமென்ற அவசியம் கிடையாது. மற்றவர்கள் பொறுமையற்றவர்களாயிருந்தால், அது தவறு என்று குறை கூறுவது நமது கடமை என்று நாம் எண்ணிவிட லாகாது. பிறர் பொறுமை யில்லாமலிருந்தால் என்ன? நாம் பொறுமையோடிருப்போம். பிறர் பொறுமை இழந் தால் அதற்காகக் கவலைப்படவேண்டாம். சர்வலோக சஞ்சீவியாகிய அன்பைப் பயன்படுத்துங்கள். அது அற்புதமாகக் குணப்படுத்திவிடும்.

சிலர் மதத்தையே அழித்துவிட விரும்புகிறார்கள். மதம் முற்றிலும் பயனற்றதாகவும், பொய்யானதாகவும் ஆகிவிடுமானால் பாம்பு சட்டை கழற்றுவதுபோல அதை அழித்துவிட வேண்டியது அவசியம்தான். ஆனால் பாம்பு சட்டையை நீக்கிவிடுகிறதேயன்றி, அது இறந்துபோவ தில்லை. அதுபோல் மதத்தில் சேர்ந்த அழுக்குகளை நீக்கி விட வேண்டுமேயன்றி, மதத்தை அழித்துவிட வேண் டியதில்லை. பாம்புக்கு உயிர் தோலன்று; ஆனால் பாம்பு

உயிர் வாழ்வதற்குத் தோல் அவசியமாகும், இந்தியா தேசத்தில் மதத்தை அழித்துவிட்டால் இந்தியா இறந்து போகும் என்பது என் கருத்து. மதத்தை அழித்து இந்தியாவைப் புனருத்தாரணம் செய்ய முடியாது. ஜனங்கள் மதங்களின் பெயரால் சண்டையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை நாம் நிறுத்த வேண்டும். அதற்காக நாம் மதத்தையே அழித்துவிட வேண்டிய அவசியமில்லை. சிலர் சமூகச் சீர்திருத்த விஷயத்தில் நமக்கு மாறான கருத்துடையவர்களாயிருந்தால், அதற்காக சமூகச்சீர்த்திருத்த வேலையையே விட்டுவிட வேண்டுமென்று கருதுகிறீர்களா?

அறிவைக் குழம்பவிடலாகாது. அன்பு உணர்ச்சியைக் கைவிடலாகாது. அத்துடன் பணிவுக் குணத்தையும் அடிக்கடி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் நாம் கவலைப்படவும் செய்வோம். எந்தக் காரியத்தையும் செய்யாதவர்களாக ஆகிவிடவும் செய்வோம்.

உங்களிடம் இன்னுமொரு விஷயம் கூற விரும்புகிறேன். இப்பொழுதுள்ள மக்களைத் தாக்கினாலும் முன்னோர்களைத் தாக்கலாகாது. அப்படிச் செய்தால் அநேக விதமான சச்சரவுகளும், பகைமைகளும் உண்டாகும். அத்துடன் அது நியாயமற்றதாகும். உயிரோடுள்ளவர்களைத் தாக்கக் காரணங்கள் காணலாம். ஆனால் இறந்து போனவர்களைத் தாக்கப் போதுமான காரணங்கள் காண முடியாது. ஆதலால் பதில் சொல்ல முடியாத நிலைமையிலுள்ள இறந்தவர்களைத் தாக்குவதை தயவுசெய்து விட்டு விடுங்கள். இப்போதுமேனாட்டு அறிஞர்கள் கண்டுபிடிக்கக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் அநேக உண்மைகளை நம்முடைய முன்னோர்கள் கண்டு கொண்டிருக்கிறார்கள். நமது பெரிய மூலதனம் நம்முடைய முன்னோர்கள்

தந்துள்ள ஞானம்தான். தற்கால கணித சாஸ்திரத்துக்கு அஸ்திவாரமாகவுள்ள தசாம்ச முறையானது இந்தியாவிலேயே கண்டுபிடிக்கப்பட்டது என்பதைப் பற்றி நான் பெருமை கொள்கிறேன். அது போலவே தற்காலத்தில் காணப்படும் விஞ்ஞானமானது இந்தியா தேசத்திலேயே ஆதியில் உற்பத்தியாயிற்று என்பதை அறியவும் நான் பெருமை கொள்கிறேன். நம்முடைய முன்னோர்கள் முட்டாள்களும், ஏமாற்றுக்காரர்களும் அல்லர். அவர்கள் உண்மையை நாடினர்கள். அதனால் அரும்பெரும் காரியங்களைச் சாதித்திருக்கிருர்கள்.

நாம் ஜாதி வேறுபாடுகளை ஒழிக்க விரும்புகிறோம். இந்திய மக்கள் எல்லோரையும் ஒரே சமூகமாக சேர்க்க விரும்புகிறோம். அப்படியே செய்வோம். ஆனால் ஜாதி என்பதைச் சிருஷ்டித்தவர்கள் அயோக்கியர்கள் என்று எண்ணிவிடலாகாது. அந்தக் காலத்தில் அது பயனளிப்பதாயிருந்தது. அதனால்தான் உற்பத்தியாயிற்று. அது அவசியம் இருந்ததால்தான் நிலைக்க முடிந்தது. நமக்கு அது தேவையில்லை என்பதற்காக நம்முடைய முன்னோர்களை குறை கூறக்கூடாது. நாற்காலி செய்யத் தயாராகவுள்ள மரத்தில் பட்டை யிருக்குமானால் அதை இரக்கமின்றி உரித்து நீக்கி விடுகிறோம். அதை வைத்துப் பட்டை உண்டாயிருக்கவே கூடாது என்று கூறலாமா? நீண்ட நாளாக வளர்ந்த மரத்தின் உயிருக்கே அது அவசியமல்லவா? அது மரத்தின் ஜீவாம்சமான ஒரு பகுதியே அல்லவா? இப்போது அது நமக்குத் தேவையில்லை என்றால், அதைச் சீவி எறிந்து விடுவோம். அதற்காக ''ஏன் இந்த உபயோகமற்ற பட்டையை உண்டாக விட்டாய்?'' என்று தோட்டக்காரரைக் கோபித்துக் கொள்ளலாகாது. ஜாதி முறை அந்தக் காலத்தில்

அவசியமாயிருந்தது. ஜன சமூக மரத்தைக் காப்பாற்றியது; ஆனல் இன்று அது வெட்டி எறியவேண்டிய வெறும் பட்டையாகவே யிருக்கிறது. அதனல் அதைச் சீவி எறிந்துவிடலாம். ஆனல் அதற்காக நமது முன்னேர்களுடைய நற்பெயரை இழிவுபடுத்த வேண்டாம்; அப்படிச் செய்தால் பகைமைதான் உண்டாகும். அதனல் அதைச்செய்யலாகாது. நம்முடைய சீர்திருத்த வேலைக்கு அது உதவி செய்யாது.

சரியான வழியில் சென்ருல் வெற்றி காண்பது நிச்சயம். வெற்றி காணுவிட்டால் வேலையை எல்லாம் நிறுத்திவிட வேண்டியதே என்று எண்ணிவிட வேண்டாம். இளைஞர்கள் அதைரியப் படலாகாது.

தண்ணீரில் விழுந்தவன் தத்தளிப்பது போல, நாம் தத்தளித்துக் கொண்டிருக்கிருேம். கரை சேரவேண்டியதே நம்முடைய பிரதானமான நோக்கம். அதை மறந்துவிட்டு நமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கலாகாது. நமக்குப் பலமில்லாவிட்டாலும், வெற்றி கிடைக்காவிட்டாலும் கடவுளிடம் பிரார்த்தனை செய்ய வேண்டுமேயன்றி, பிறரிடம் குற்றம் கண்டு பிடிப்பதிலேயே திருப்தி அடையலாகாது. குற்றம் கண்டுபிடிப்பது சேவையாகாது. நாம் தீவிரவாதிகள்: நம் குறைகளை அறிய முயல்வதில்லை. மிதவாதிகளுடைய குறைகளைக் காண்பதிலும் அவர்களை வைவதிலும் ஈடுபட்டிருக்கிருேம். மிதவாதிகளும் அதே காரியத்தைத்தான் செய்கிருர்கள். இந்தப் பொறியில் விழாதபடி நீங்கள் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். ஆகவே எந்த வேலை செய்ய ஆரம்பித்தாலும் உங்களால் செய்யக்கூடியதைச் செய்யுங்கள்; பிறர்மீது பழி சுமத்த முயலாதீர்கள்.

# ரூர்க்கேலா பிலாய் ஆலைகள்

ரூர்க்கேலா, பிலாய் ஆகியவிடங்களில் முதல் ஊது உலைகளை இந்திய ராஷ்டிரபதி இவ்வாண்டின் ஆரம்பத்தில் தொடங்கி வைத்தார். அவை வேலைசெய்யத் தொடங்கியிருக்கின்றன. அது, இந்தியத் தொழில்துறைச் சரித்திரத்தில் மிகவும் குறிப்பிடத் தகுந்த ஒரு முன்னேற்றமாகும். இந்த ஆலைகள் இரும்பை உற்பத்தி செய்ய ஆரம்பித்து விட்டன.

ஊது உலையில் இரும்பு உற்பத்தி செய்வது தொடர்ந்து நடைபெறுகிற ஒரு பக்குவ முறையாகும். இரும்பு உற்பத்தியாகத் தொடங்கிய பிறகு ஒவ்வொரு நாளும் இரவும் பகலும் இடைவிடாமல் உற்பத்தியாகிக் கொண்டேயிருக்கும். ஒவ்வொரு நாளும், 1700 டன் கனி இரும்பும், 1000 டன் கோக் கரியும், 500 டன் சுண்ணாம்புக் கல்லும் உலையிலிடப்படும். ரூர்க்கேலாவிலும், பிலாயிலும் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள கோக் கரி உலைகள் தினமும் 1600 டன் நிலக்கரியைக் 1000 டன் கோக் கரியாக மாற்றிக் கொண்டே இருக்கும். உலைகளில் இரும்பை உருக்குவதற்கு மின்சார யந்திரங்கள் ஏற்கெனவே உள்ளன.

ஊது உலை ஏற்பட்டது என்றுகூறுவதைக் கேட்டால் அது சுலபமான ஒரு விஷயமாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில், ஊது உலையில் இரும்பு உற்பத்தி செய்ய வேண்டுமென்றால், ஏராளமான யந்திரங்களும்-இவற்றில் பெரும்பாலான யந்திரங்கள் வேறு பெரிய ஆலைகளைவிடப்

பெரியவை - ஒன்றுக்கொன்று தொடர்புள்ள சிக்கல் நிறைந்த சேவை வசதிகளும் ஒருப்போல இணைந்து வேலை செய்ய வேண்டியிருக்கின்றன. சிக்கல் நிறைந்த இந்த ஊது உலைக் கட்டுக்கோப்பில், நிலக்கரியையும் கனி இரும்பையும் கையாளும் யந்திரங்கள் கோக் கரி அடுப்புகள், உப பொருள் தயாரிப்பு யந்திரம், மின்சார உற்பத்தி யந்திரம், வாயுவைப் பரிசுத்தமாக்கும் யந்திரம், காற்றை ஊதும் துருத்திக் கருவிகள், மின்சாரம், வாயு, தண்ணீர் ஆகியவற்றைச் சேகரிப்பதற்கும் வினியோகிப் பதற்குமான ஏற்பாடுகள் ஆகிய யந்திர அமைப்புகள் இருக்கின்றன. இந்த எல்லா யந்திரங்களையும் ஒருமுகப் படுத்தி, வேலை செய்வதற்குத் தகுதியாக்கும் பணியில் ஆயிரக் கணக்கானவர்கள் சில மாதங்களாக உழைத் தனர். ஆலையை நிர்மாணிக்கும் வேலையும், யந்திரங்களை அமைக்கும் வேலையும் துரிதமாக முன்னேறிக் கொண்டு வருகின்றன. ரூர்க்கேலாவில் சுமார் 59,000 பேர் வேலை செய்கின்றனர். பிலாயில் 64,000 பேர் வேலை செய்கின் றனர்.

ஊது உலை வேலை ஆரம்பிப்பதானது மிகப் பிரம் மாண்டமான நிகழ்ச்சி என்றாலும் அது, தொடர்ந்து ஏற் படவிருக்கிற நிகழ்ச்சிகளில் முதல் படிதான். உருக்கு ஆலையில் பூரணமான உற்பத்தி தொடங்க வேண்டுமென் ருல், இன்னும் ஒன்றிரண்டு ஊது உலைகளும் வேலை செய்ய ஆரம்பிக்க வேண்டும், அது மட்டுமல்ல. அவை களைச் சேர்ந்த இதர துணை யந்திரங்களும் இயங்கவேண் டும்–அதாவது இரும்பை உருக்குக் கட்டிகளாக மாற்று கிற உருக்குப் பட்டறைகள், உருக்குக் கட்டிகளை விற்பனைக் கேற்ற வேலை தீர்ந்த உருக்குப் பொருளாக்கு கிற தகடு அரைக்கும் ஆலைகளும் அமைக்கப்பெற வேண்டும். இது சம்பந்தமான பெருமளவு வேலையும்

ஏற்கெனவே முடிந்துவிட்டது. வெளி நாடுகளிலிருந்து வரவேண்டிய பெரும்பாலான யந்திரங்களும், கருவிகளும் இந்தியாவிற்கு அல்லது ஆலை நிறுவும் இடத்துக்கு வந்துவிட்டன. எல்லா ஊது உலைகள், கோக் கரி உலைகள், உருக்குப் பட்டறைகள் ஆகிய வற்றுக்கான அஸ்திவாரங்களும் பூர்த்தியாகிவிட்டன.

ஆலை யந்திரங்களை நிர்மாணிக்கும் வேலையும் துரிதமாக நடைபெறுகிறது. இரண்டு ஆலைகளிலும் உருக்கு உற்பத்தி மும்முரமாகத் தொடங்கிவிடும். இவ்வாண்டு இறுதிக்குள் தகடு அரைக்கும் முதல் வரிசை ஆலைகளில் விற்பனைக்கான உருக்குப் பொருள்கள் தயாராகத் துவங்கி விடும். 1950-ஆம் ஆண்டில் நிர்மாண வேலை உச்ச நிலையை அடைவது மட்டுமின்றி, ஒரு பக்கத்தில் கணிசமான உற்பத்தியும் நடைபெறும்.

ஆலைகளின் உற்பத்தி

உருக்கு ஆலையிலுள்ள எல்லா இலாகாக்களும் வேலை செய்ய ஆரம்பித்த பிறகு, ரூர்க்கேலாவில், 200,000 டன் கெட்டித் தகடுகளும், 470,000 டன் மெல்லிய தகடுகளும், 50,000 டன் டின் தகடுகளும் 50,000 வார்ப்பட இரும்பு ஆகியவைகளும் தயாராகும். உப-பொருள்கள் உற்பத்திப் பிரிவில் தினமொன்றுக்கு 130 டன் தார் உபயோகித்து, பென்சால், கிரியோசோட், நாப்தலீன் ஆகியவைகளும் உற்பத்தியாகும். "ஆக்சிஜென்" ஆலையிலுள்ள அதிகப்படியான நைட்ரஜனை உபயோகப்படுத்துவதற்காக ஒரு ரசாயன உரத் தொழிற்சாலையும் அமைக்கப் பெறுகிறது. இந்த ஆலையில் 580,000 டன் நைட்ரோ லைம் ஸ்டோன் உற்பத்தியாகும். இந்த ரசாயன உரத் தொழிற்சாலை, சிந்திரியைப் போல ஒரு பெரிய தொழிற்சாலையாக இருக்கும். பிலாயில் 200,000 டன் தண்டவாளங்

களும் ஸ்லிப்பர் கட்டைகளும் 160.000 டன் நடுத்தர கட்டுமான சாதனங்களும், தொழிற்சாலைகளுக்கு, வேண்டிய 150,000 டன் துண்டுகளும், வார்ப்படத் தொழிலுக்கு வேண்டிய 300,000 டன் இரும்பும் உற்பத்தியாகும். பிலாயிலுள்ள உப-பொருள் உற்பத்திச் சாலையில் தினமொன்றுக்கு 130 டன் தார் செலவாகும்; ரூர்க்கேலாவில் உற்பத்தியாவதைப் போன்ற அதே தார்ப் பொருள்கள் உற்பத்தியாகும்.

ரூர்க்கேலாவிலும் பிலாயிலும் தயாராகிற உருக்குத் தயாரிப்புகள், இந்தியாவில் நீண்டகாலமாக இருந்துவருகிற உருக்குத் தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கு துணை செய்யும். பர்ன்பூரிலும் ஜாம்ஷெட்பூரிலுமுள்ளபுதியஊது உலைகள் வேலை தொடங்கியதிலிருந்து தேனிரும்பு உற்பத்தியும் முன்னேறியிருக்கிறது. ரூர்க்கேலாவிலும்,பிலாயிலுமுள்ள ஊது உலைகள் வேலை செய்யத் தொடங்கியதும் நிலைமை இன்னும் முன்னேற்ற மடையும்.

அபிவிருத்தி நிலைமைகள்

உருக்குப் பொருள்கள் விஷயத்திலும் 1959 ஆம் ஆண்டில் சிறந்த முன்னேற்றமேற்படும். முதல் ஆறு மாதத்தில் பர்ன்பூரிலும், ஜாம்ஷட்பூரிலும் ஏற்படும் அதிகப் படியான உற்பத்தி, சாதாரண கட்டுமானத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு உதவும். ஆனால்,ரூர்க்கேலாவிலும் பிலாயிலுமுள்ள தகடரைக்கும் ஆலைகள் வேலை செய்யத் தொடங்கிய பிறகுதான் ரயில்வே சாதனங்கள், தொழில்களுக்கு வேண்டிய, கெட்டி, மெல்லிய தகடுகள் ஆகியவைகளின் உற்பத்தி நிலைமை முன்னேற்ற மடையும்.

மூன்று பெரிய உருக்குத் தொழிற்சாலைகளை ஒரே சமயத்தில் நிர்மாணிக்க முயல்வது மிகவும் சிரமமான

வேலைதான். இந்தச் சிரமங்கள், ஆரம்ப கட்டத்தில் மிகவும் அதிகமாக இருந்தன. பிலாய்க்கு வேண்டிய அவ்வளவு யந்திரங்களும் கருவிகளும் சோவியத் அரசாங் கத்தாரிடமிருந்து கிடைத்தன. ஆனால் இந்தியாவில் அதை நிர்மாணிக்கும் முழுப்பொறுப்பும் திட்ட வேலை ஸ்தாபனத்தைச் சேர்ந்ததாகும். வெளிநாடுகளிலிருந்து வந்த கருவிகளை விசாகபட்டணத் துறைமுகத்திலிருந்து திட்டவேலைப் பிரதேசத்துக்குக் கொண்டு செல்லவேண்டி யிருந்தது. ஆரம்பக் கட்டங்களில் விசாகப்பட்டணம் துறைமுகத்தில் இவ்வளவு பெருமளவிலான சரக்குக்களை இறக்கி, ஏற்றி அனுப்புவதற்கான வசதிகளில்லை. ரூர்க் கேலா சம்பந்தப்பட்ட வரையில், வெளிநாடுகளிலிருந்து வந்த யந்திரங்களை 50-க்கு அதிகமான ஸ்தாபனங்கள் விற்பனை செய்தன. இந்த ஆலை சம்பந்தமான பல்வேறு பிரிவு என்சினீயரிங் வேலைகளுக்கும், அஸ்திவார மிடுவ தற்கும் ஏராளமான கண்டிராக்டர்கள் தேவையிருந்தது. பெரும்பாலான கண்டிராக்டர்களுக்கு இந்த வேலைகள் புதியது மட்டுமல்ல; அவர்கள் இந்த அளவிலான வேலை களை இதற்கு முன்னால் மேற்கொண்டதுமில்லை. எனவே வேலைகளை ஒருமுகப்படுத்துவது பெரும் பிரச்னையாக இருந்தது. இவ்விரு இடங்களிலும், ஒரே சமயத்தில் பெரிய நகரங்களையும், கனிச் சுரங்கங்களையும் நிர்மாணிக்க வேண்டியதாயிற்று. ஆனால் வர வர அதிக அனுபவம் கிடைத்ததன் பயனாகவும், தீவிர உழைப்பின் காரணமாக வும், இச் சிக்கல்களெல்லாம் ஒருவாறாகச் சீர்பெற்றன.

### சிப்பந்திகள் பயிற்சி

இந்த ஆலைகளை நிர்மாணிப்பது, அவற்றை இயக்கு வது ஆகியவற்றுக்கான சிப்பந்திகளைத் தெரிந்தெடுத்துப் பயிற்சியளிக்கும் வேலை இன்னும் அதிகக் கடினமான

வேலையாக இருந்துவருகிறது. இந்தியாவில் பெருமளவில் இரும்பு-உருக்கு உற்பத்தித் தொழில் ஏற்கெனவே இருந்திருந்தால் இந்தத் தொழிலுக்குவேண்டிய அனுபவமுள்ளவர்களைத் தெரிந்தெடுப்பது சுலபமாக இருந்திருக்கும். ஆனால் இந்தியாவிலுள்ள பெரிய உருக்கு ஆலைகள், தங்கள் விஸ்தரிக்கும் பணியில் முனைந்திருக்கின்றன. எனவே அனுபவமுள்ளவர்களைச் தெரிந்தெடுக்கும் விஷயம் சுலபமானதல்ல. இந்த ஆலைகளில், சிப்பந்திகளைப் பயிற்சிக்கு அனுப்புவதற்கான வசதிகளும் மிகக் குறைவு. ஆகவே அனுபவமில்லாத இளம் என்சினீயர்களையே நம்பவேண்டியிருக்கிறது. அவர்களில் பெரும்பாலானவர்கள், ருஷ்யா ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா, ஆகியவிடங்களில் பயிற்சியளிக்கப் பெறுகின்றனர்.

இதையும் தவிர, ஏராளமான சிப்பந்திகள் இந்த மூன்று உருக்குத் தொழிற்சாலைகளிலும் இந்தியாவிலுள்ள சுமார் 50 தொழில்துறை ஸ்தாபனங்களிலும் பயிற்சிபெறுகின்றனர். சுமார் 1000 பேர் பயிற்சி முடித்துவிட்டனர்; புதிய கோஷ்டிகள் இனிமேல் பயிற்சிபெறும். ரூர்க்கேலாவிலும், பிலாயிலுமுள்ள பல்வேறு இலாகாக்கள் வேலை ஆரம்பித்த பிறகு ஏராளமான சிப்பந்திகள் இங்கேயே பயிற்சி பெறலாம்.

அனுபவப் பள்ளி

பெரிய நெருக்கடிக் கிடையில் இத்தகைய மாபெரும் அளவில் நிர்மாணம் நடைபெறுவதானது தீவிர பயிற்சி பெறுவதற்கு ஒரு வாய்ப்பாகவும் இருக்கிறது; குறைந்த கால அளவில், பெரும் நெருக்கடியின் மத்தியில், எல்லா கட்டங்களிலும் குறைந்த அளவு எண்ணிக்கையுள்ள பயிற்சி பெற்ற, அனுபவமுள்ள சிப்பந்திகளையும்

வைத்துக் கொண்டு வேலை நடத்துவதன் மூலம் அரிய அனுபவம் ஏற்பட்டிருக்கிறது.

எதிர்காலத் தொழில்நுட்ப நிபுணர்களுக்கும் சிப்பந்திகளுக்கும், இந்த உருக்கு ஆலைகளே பயிற்சிக்கூடமாக விளங்கும். உருக்கு ஆலைகளை நிர்மாணிப்பது சம்பந்தமான விசேஷத் துறைகளில் அனுபவமுடைய பெரிய நிர்மாண ஸ்தாபனம் ஏற்படுத்தப் பெறும். இந்த ஸ்தாபனத்திடம் ஏராளமான கட்டுமானக் கருவிகள் இருக்கும். டிசைன் அமைப்பு ஸ்தாபனத்தின் மூலக் கருவொன்று ஏற்கெனவே இருந்துவருகிறது. கட்டுமான, நிர்மாண வேலைகளில் இம்மாதிரி அனுபவம் கிடைத்தவர்களைக் கொண்டு இந்த ஸ்தாபனத்தை அபிவிருத்தி செய்யலாம்.

உருக்கு உற்பத்தி முன்னேற்றமடைந்து உருக்கு கட்டுமான சாதனங்கள் போன்ற உதவித் தொழில்களும் வலுப்பெற்று, ராஞ்சியில் கனரக யந்திர நிர்மாண ஆலையும் தொடங்கி விட்டால் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகளை இந்தியா நம்பிக்கையுடன் மேற்கொள்ள உதவும். அதோடு, சிப்பந்திகள், சாதனங்கள், கருவிகள், ஆகிய விஷயத்திலும் உள்நாட்டு ஆதார வசதிகளை இன்னும் அதிக அளவில் நம்பி வேலை செய்யலாம்.

# கொசு ஒழிப்பு

கொசுக்களை ஒழிக்க ரசாயனக் கலவைப் பொருளைக் கொண்டு "சுவர்" ஒன்றை எழுப்பும் முறையை அமெரிக்கப் பேராசிரியர் ஒருவர் கண்டு பிடித்திருக்கிறார். இவர் பெயர் வில்லியம் ஆர். ஹார்ஸ்பால். இல்லினொய்ஸ் பல்கலைக் கழகத்தில் பூச்சிகள் பற்றிய ஆராய்ச்சிப் பேராசிரியராக இருக்கிறார்.

ஹார்ஸ்பால் உபயோகிப்பது, அமெரிக்காவில் மிகப் பரவலாக உபயோகிக்கப்பட்டுவரும் பூச்சி நாசினியான டி. டி. டீ. (D. D. T.)யுடன் 'வெர்மிகுலைட்' என்ற ஒரு பொருளையும் சேர்ந்த ஒரு கலவையாகும். 'வெர்முகுலைட்' என்பது அப்ரகம் கலந்த ஒரு பொருள். இது டி. டி. டீ. யை எடுத்துச் செல்லும் ஒரு கருவியாக இருக்கிறதே தவிர, அதற்கென்று தனியே விசேஷ குணம் ஒன்றும் கிடையாது. வெப்பத்தின் மூலம் சிறு சிறு உருண்டைகளாக இந்த வெர்மிகுலைட் மாற்றப்படுகிறது. ஹார்ஸ்பால் தயாரித்துள்ள கலவை, பத்து பாகம் வெர்மிகுலைட்டும் ஒரு பாகம் டிடிடீயும் சேர்ந்ததாகும். ஒரு ஏக்கருக்கு பத்து ராத்தல் என்ற கணக்கில் புல்தரைகளிலும் புதர்களிலும் இது தெளிக்கப்படுகிறது. சாதாரணமாக ஒரு வீட்டைச் சுற்றியுள்ள முற்றத்தில் தெளிக்க இரண்டு ராத்தல் கலவை போதுமானது.

இந்தக் கலவைப் பொருள் கண்களுக்குத் தென்படாத ஒரு சுவரை எழுப்பி, குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் கொசுக்கள் வராமல் தடுக்கிறது.

முதல் தடவையாக ஹார்ஸ்பால் இதை உபயோகித்துப் பார்த்தபோதே நல்ல பலன்கள் கிடைத்தன.

ஒரு வாரம் பலனிருக்கும்

ஒரு குறிப்பிட்ட இடத்தை உபயோகிப்பதற்கு ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்திற்கு முன்னதாக இந்தக் கலவைப் பொருளைத் தெளித்தால், அந்தப் பிரதேசத்திலிருந்து கொசுக்கள் விரைவில் ஒழிக்கப்பட்டுவிடுகின்றன. சீதோஷ்ண நிலையை அனுசரித்து இந்தக் கலவை ஒரு நாளிலிருந்து ஒரு வாரம்வரை பலன் அளிக்கிறது.

அமெரிக்காவிலே சதுப்பு நிலங்களிலும், கொசு உற்பத்தியாகும் இதர இடங்களிலும் கொசுப் புழுக்களை ஒழிக்க பலஆண்டுகளாக இந்தக் கலவையை உபயோகிக்கின்றனர். ஆனால் சிறிய பிரதேசங்களில் உடனடியாகக் கொசுக்களை ஒழிப்பதற்கு இந்தக் கலவையை உபயோகிக்கும் கொள்கை முற்றிலும் புதிதாகும். உலகில் கொசுக்கள் சுகாதாரத்திற்குப் பெரும் தொல்லையாக இருக்கும் பிரதேசங்களில் கொசு ஒழிப்புக் குழுக்களின் பணிகளை விஸ்தரிக்க இந்தப் புதிய முறை மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கலாம். அதாவது இந்த ரசாயனப் பொருளை ஒரு குடும்பம் அல்லது சிறிய ஸ்தலக் குழு ஒன்று உபயோகிப்பதன் மூலம் கொசு ஒழிப்பு வேலை விரிவடையலாம்.

பூச்சி நாசினி மருந்தை உபயோகிப்பதில் வழக்கமாக அனுசரிக்கப்படும் முன் ஜாக்கிரதை விதிகள் அனுஷ்டிக்கப்பெற வேண்டும். கொசுக்கள் மிக மிக அதிகமாக இருக்கும் சில பிரதேசங்களில் இது கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயமாகும். ஒரே இடத்தில் வாரத்திற்கு ஒரு தடவைக்குமேல் இந்தக் கலவையை உபயோகிக்கக் கூடாதென்று ஹார்ஸ்பால் எச்சரிக்கிருர். உணவு,

உணவு பரிமாறப்படும் மேஜைகள், உணவு வைத்திருக்கும் இடங்கள் முதலியவற்றில் இந்தக் கலவை படாமல் இருப்பது மிகவும் அவசியமாகும். இதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வளரும் காய்கறிகளிலும் பழங்களிலும் இந்தக் கலவை படாமல் இருக்கவும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

அரசாங்க அனுமதியின்றி பூங்காக்கள், உல்லாசப் பொழுதுபோக்குப்பிரதேசங்கள், முதலிய பொது ஸ்தலங்களில் இந்தக் கலவை உபயோகிக்கப்படலாகாது. இது உபயோகிக்கப்படும்போது, இந்த இடங்களை உபயோகிக்கும் மக்களை எச்சரிக்க வேண்டும். இந்தக் கலவையின் தன்மைகளை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

மூன்று பருவக் காலங்களில் ஹார்ஸ்பால் இந்தச் சோதனையைச் செய்தார். ஒரு சோதனையின் போது அவர் ஐந்து ஏகரா நிலம் ஒன்றில் முழங்கை வரை திறந்து வைத்துக் கொண்டு நின்றார். பத்து நிமிஷத்திற்குள் கொசுக்கள் பெரும் கூட்டமாக வந்தன. பிறகு இந்தப் பிரதேசத்தில் அரை ஏக்கருக்கு மேலாக இந்தக் கலவையைத் தெளித்தார். பிறகு மீண்டும் தமது கைகள் முழுவதையும் திறந்து வைத்துக் கொண்டு நின்றார். ஒரு கொசுகூட வரவில்லை. அவர் இந்த இடத்தை விட்டுச் சென்றதும் அவை கூட்டம் கூட்டமாக வந்து அவரை மொய்த்தன.

இன்னொரு சோதனையில், அவரும் அவருடைய அண்டை வீட்டுக்காரரும் அவர்களுடைய குடும்பங்களும் அடுத்தடுத்து இருக்கும் முற்றங்களில் உல்லாச விருந்து உண்டனர். ஹார்ஸ்பாலின் முற்றத்தில் கலவை தெளிக்கப்பட்டது. ஆனால் அவருடைய அண்டை வீட்டுக்காரரின் முற்றத்தில் தெளிக்கப்படவில்லை. ஹார்ஸ்பாலின்

கோஷ்டி உல்லாச விருந்தை ரசித்து அனுபவித்தது. ஆனால் அண்டை வீட்டுக்காரரும் அவருடைய குடும்பத்தினரும் விருந்தினர்களும் கொசு உபத்திரவம் தாங்காமல் உள்ளே சென்றனர். ஹார்ஸ்பாலின் ரசாயனக் கலவை எவ்வளவு தூரம் பயன் அளிக்கவல்லது என்பதுஇதனால் தெரிகிறது.

---

## இரத்தச் சேமிப்பு

காலவரம்பின்றி எவ்வளவு நாள் வேண்டுமானாலும் இரத்தத்தைச் சேமித்து வைக்க அமெரிக்க வைத்திய அதிகாரிகள் புரட்சிகரமான ஒரு புதிய முறையைக் கண்டு பிடித்துள்ளனர். இரத்த அணுக்களைத் தனித் தனியாகப் பிரித்து உறைய வைப்பது புதிய முறை. இம் முறையினால் இரத்தத்தின் உயிர் கொடுக்கும் தன்மை கொடாமல் காப்பாற்றப்படுகிறது. உலகம் முழுவதும் இதனால் நன்மையடையும் என்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். முன்பெல்லாம் இரத்தத்தின் சிவப்பு அணுக்கள் கிட்டத்தட்ட ஒரு மாத காலமே கெடாமல் இருப்பதாகக் கருதி வந்தனர். ஆனால் உலகில் எங்கு இரத்தம் சேமித்து வைக்கப்பட்டிருந்தாலும், சேமித்து வைத்து ஒரு மாதம் முதல் இரு ஆண்டுகள் வரை எவ்வளவு காலம் ஆகியிருந்த போதிலும் சிகிச்சையில் அதைப்பயன் படுத்தி டாக்டர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

# கொய்த மலர்கள்

பிரார்த்தனை

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்து ஆண்டு
பலகோடி நூறு ஆயிரம்
மல்லாண்ட திண் தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருகாப்பு.

—திருப்பல்லாண்டு

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணியிரங்கவும் நின்
தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே.

—தாயுமானவர்

தீய எண்ணங்கள்

உள்ளே இருக்கும் ஜனங்கள் விழித்துக்கொண்டிருக்கும் வீட்டில் திருடர் நுழைவதில்லை. நீ விழித்துக் கொண்டிருந்தால், உன் உள்ளத்தில் தீய எண்ணங்கள் நுழையமாட்டா.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

தீரர்கள்

மனம் கலைவதற்குக் காரணம் உள்ளபோதும், எவர்களுடைய மனம் கலையவில்லையோ, அவர்களே தீரர்கள்.

—குமார ஸம்பவம்

கடவுள்

முயற்சி உலகில் நாம் அரசர். பயன் உலகில் கடவுள் ஒருவரே அரசு புரிகிறார்.

—காந்தியடிகள்

இறந்தோரைப் பிழைப்பித்தல்

ஒருவரும் சாகாத வீட்டிலிருந்து கடுகு வாங்கி வந்தால், இறந்த குழந்தையைப் பிழைப்பிக்கலாம்.

—கௌதம புத்தர்

இருவர்

தங்கள் கருத்துக்களை ஒரு நாளும் மாற்றிக்கொள்ளாதவர்கள் இருவர். அதில் ஒருவர் மூடர், மற்றொருவர் இறந்தவர்.

—லவல்

ஜனநாயகம்

நான் எப்படி அடிமையாக மாட்டேனோ, அப்படியே ஆண்டானாகவும் மாட்டேன். இப்படி எண்ணி வாழ்வாயாக. அதுதான் உண்மையான ஜனநாயகமாகும்.

—ஆபிரகாம் லிங்கன்

இன்பம்

இன்பம் அனுபவிக்க நீ விரும்பினால், பிறர் இன்பம் அடைய வழி செய். குறுக்கு வழியும் கோணல் நடத்தையும் கடைப்பிடிப்பதால் நீ நிச்சயமாக இன்பம் துய்க்க முடியாது: மற்றவர்களையும் அழைத்துக்கொண்டுதான் செல்ல வேண்டும்.

—இங்கர்சால்

கவிஞன்

ஓர் சிறந்த கவிஞன் ஒரு சோலையின் மிகச் சிறந்த பயன்களை எல்லாம் அனுபவித்துவிடுகிறான். ஆனால், அந்தச் சோலையின் சொந்தக்காரனோ பழங்கள், மட்டைகள் இவைகளை மட்டுமே சுமந்து செல்கிறான்.

—தோரோ

அனுபவம்

அவரவருடைய தவறுகளுக்கு அவரவர்கள் சூட்டிக் கொள்ளும் அருமையான பெயரே அனுபவம்.

—ஆஸ்கார் ஒயில்டு

சர்வகலாசாலை

சர்வகலாசாலைகளில் ஏன் கல்வியறிவு நிறைந்திருக்கிறது தெரியுமா? அதன் உள்ளேவருபவர்கள் கொஞ்சம் அறிவுடன் வருகிறார்கள்; அதைவிட்டு வெளியே செல்பவர்கள் அறிவு சூன்யமாய்ப் போகிறார்கள். அதனால்தான் அங்கு அறிவு குவிந்துபோகிறது.

—பிரசிடெண்ட் வோவல்

வெற்றியின் ரகசியம்

பொதுநல வேலைவேறு, சுவாமி பூஜை வேறு என்று எண்ணுவது தவறு. எல்லாம் ஆண்டவன் வழிபாடாகவே எண்ணி வேலையைச் செய்ய வேண்டும். கடவுள் நினைவு வைத்துக் கொண்டு வேலை செய்வது காரியத்துக்குத் தடையாகாது. எந்த வேலை செய்யும்போதும், பக்தி செய்து கொண்டே வேலை செய்வது, பழக்கத்தில் மகிழ்ச்சியாகவே முடியும்; ஊக்கமும் தரும்; வேலைத் திறமையும் தரும். காந்தியடிகள் அடைந்த வெற்றியின் ரகசியம் இதுவே என்று நான் உறுதியாகச் சொல்லுவேன். மனிதன் நடக்கும்போது, கூடவே நிழல் தொடர்வதுபோல், அவர் செய்து நடத்திய எந்த வேலை, எந்தத் திட்டம்,முயற்சியிலும் ஆண்டவனுடைய நினைவை அவர் தம் உள்ளத்தில் எப்போதும் நிறுத்தி வந்தார். அவருடைய வேலைகளுக்கு அது தடையாக இருக்கவில்லை; வெற்றிக்கே காரணமாக இருந்தது. நாம் செய்யும் சிறு தொண்டுகளிலும் அவ்வாறே ஆண்டவன் நினைவு பக்கத்தில் நிழல்போல் நின்று ஆரவாரமின்றி மௌனமாகவே

உதவிசெய்யும். ஆண்டவனை எப்போதும் மனத்தில் வைத்துக்கொண்டு வேலை செய்வது, பொதுப் பணிக்கு இன்றியமையாத ஓர் ஆதாரமாகும். பழுதற்ற மனம் ஒரு பெருஞ் செல்வமும் சாதனமுமாம். அதைப் பெறுவதற்குப் பக்தி ஒன்றே வழி.

—ராஜாஜி

வியாதிக்குக் காரணம்

நோய்களுக்குக் காரணம் அழுக்கு. உடம்பையும் துணியையும் அழுக்கு இல்லாமல் வைத்துக்கொள்ள வேண்டும். வீட்டையும் வாசலையும், புழைக்கடையையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். குப்பையும் மலத்தையும் நாம் கண்ட இடங்களில் போடக்கூடாது. போட்டால் காற்றைக் கெடுத்துவிடும். குறிப்பிட்ட இடத்தில் குழிதோண்டி, அங்கேயே போடவேண்டும். இப்படிச் செய்தால் அது நல்ல உரமாகும். அந்த உரத்தை வயலில் போட்டு உழுதால். நல்ல பயிர் உண்டாகும். வீட்டிலுள்ள அழுக்கை வாரித் தெருவில் போட்டுவிடுவது நமக்கு நஷ்டம்; மற்றவர்களுக்குக் கஷ்டம்.

—ராஜாஜி

உடல்

இந்த உடல் நலிந்து தேய்வது, இது நோய்களின் கூடு. மிகவும் நொய்மையானது. இந்த அசுத்தக் குவியல் உடைந்து சிதறிப் போகும். வாழ்வின் முடிவு சாவுதான்.

அஸ்திகளை கொண்டு ஒரு மாளிகை கட்டி, ஊனும் உதிரமும் கலந்த சாந்து பூசப்பட்டிருக்கிறது. இதிலே வசிக்கின்றன முதுமையும், மரணமும், கர்வமும் கபடமும்.

—தம்ம பதம்

ஒளிவு மறைவு

வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாதரகசியமும் இல்லை. நான் உங்களுக்கு இருளிலே

சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதில் கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித்தம் பண்ணுங்கள்.

—ஏசுநாதர்

தலை குனிய வேண்டும்

வேலை செய்து சாப்பிடத்தக்க சரீர பலம் இருந்தும் வேலையோ சாப்பாடோ கிடைக்காமல் கஷ்டப்படும் ஒரு மனிதன் அல்லது ஒரு பெண் இருக்கும்வரையிலும் நாம் சுகமாகப் படுத்து எழுந்துகொண்டு, ராஜ சாப்பாடு சாப்பிடுவதற்காக வெட்கித் தலை குனியவேண்டும்.

—காந்தியடிகள்

வித்தியாசம்

முதலாளித்துவத்தின் அடிப்படையான குறை என்னவென்றால், அதனுடைய நன்மைகளில் எல்லோருக்கும் சமபங்கு கிடையாது,

சமதர்மத்தின் அடைப்படைச் சிறப்பு என்னவென்றால், அதன்கீழ் துன்பங்களில் எல்லோருக்கும் சமபங்கு இருக்கிறது.

—வின்ஸ்டன் சர்ச்சில்

நோயின் அறிகுறி

தீய எண்ணம் ஒன்று தோன்றியதென்றால், அதை நோயின் அறிகுறி என்றுகொண்டு உடனே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

—காந்தியடிகள்

விதியின் போக்கு

ஒரு பெண் புரு தன் நாயகனைப் பார்த்து, "நமது முடிவு காலம் வந்துவிட்டது. வேடன், வில்லும் அம்பும் ஏந்திக் கீழே நிற்கிறான்; மேலே வல்லூறு வட்டமிடுகிறது" என்று பயந்து கூறிக்கொண்டிருக்கையில், ஒரு பாம்பு அவ்வேடனைக் கடித்தது. அவன் விட்ட அம்பு

வல்லூறைக் கொன்றது. விதியின் போக்கு வெகு அதிசயம்!

### பண்டைப் பெருஞ் சொத்து

அறிவுதான் இந்தியாவின் பண்டைப் பெருஞ் சொத்து. வேத உபநிஷத காலமுதல் நாம் அதை ஆண்டு, அனுபவித்து வருகிறோம்.

—கே. எஸ். வேங்கடரமணி

### மௌனத் தியானம்

வாயினால் கடவுளின் நாமத்தை உச்சரிப்பதைவிட, மனத்தினால் தியானம் செய்வதில்தான் அதிக மகிமை உண்டு.

—காந்தியடிகள்

### தெய்வம் எங்கே?

"தெய்வம், தெய்வம் என்று சொல்லுகிறாயே; தெய்வத்தை எங்கே நீ கண்டாய்?" என்று சிலர் கேட்கலாம்.

தெய்வத்தைத் தெய்வத்தின் செயல்களால் நம் கண்ணாலேயே காணலாம்.

நம்முடைய உயிரை நாம் கண்ணால் காண்கிறோமா? இல்லை. இருந்தாலும் நாம் அதை உண்டு என்று எண்ணி, அதையே பெரிதாக மதித்து ஒவ்வொரு செயலிலும் அதற்குச் சேவை செய்கிறோமே! அதுபோலவே தெய்வத்தையும் அதன் செயல்களினால் என் அனுபவத்தில் என்றும் கண்டு வணங்குகிறேன்.

—மார்க்கஸ் ஔரேலியஸ்

### உண்மை இன்பம்

எங்கெங்கோ சென்று, எதெதையோ ஆராய்ந்து இன்பத்தைத் தேடுபவர்களிடம் ஒரு குறை உண்டு.

அவர்களுக்கு உண்மையான இன்பம் எது என்று தெரிய வில்லை. ஏனெனில் உண்மையான இன்பம் வேறுஎங்கும் இல்லை. ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. அதைத்தான் திருப்தி என்று கூறுவர்.

—ரூயரிக்

மனம்

பந்த விடுதலைகளுக்கு மனமே காரணம்;
பற்றுண்ட மனம் பந்தத்திற்காம்;
பற்றற்ற மனம் விடுதலைக்காம்.

—உபநிடதம்

புத்தகம்

தெருவில் ஒரு புத்தகம் கிடந்தது. அதை இருவர் பார்த்தனர். அந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, "இந்தப் புத்தகம் எனக்குத்தான் சொந்தம்" என்று இருவரும் சண்டை போட்டுக்கொண்டிருந்தனர்.

அந்தச் சமயத்தில் அங்கே மற்ெருரு மனிதர் வந்தார். அவர் இந்த இருவரையும் பார்த்து, "உங்கள் இருவரில் யாருக்குப் படிக்கத் தெரியும்?" என்று கேட்டார்.

"இரண்டு பேருக்குமே தெரியாது" என்றனர் இருவரும்.

"அப்படியாளுல் உங்களுக்குப் புத்தகம் எதற்கு? புத்தகத்துக்கு நீங்கள் ஆசைப்படுவானேன்? உங்கள் சண்டையைப் பார்த்தால், இரண்டு வழுக்கைத்தலைப் பேர்வழிகள் ஒரு சீப்புக்காக அடித்துக் கொண்ட விஷயம் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது" என்ருர் அந்த மனிதர்.

—டால்ஸ்டாய்

உண்மை அன்பு

உண்மையான அன்பை வாய்ச் சொல் வெளிப்படுத்தாது; சேவைதான் வெளிப்படுத்தும்.

—காந்தியடிகள்

### மனிதனே!

மனிதனே! நீ உலகின் கண்களாவாய்; உலகின் உள்ளமாவாய். முதலில் உன்னை நம்பு. பிறகு உலகம் உன்னை நம்பும். மனிதத் தன்மை, பயன் கருதாது, பிறருக்குப் பணியாற்றுவதே, அதிலிருந்து நீ, ஒரு துளி கூடக் கீழே இறங்காதே.

—எமர்சன்

### தன்னம்பிக்கை

தன்னம்பிக்கை இழந்து வாழ்பவன், வாழ்க்கைப் போராட்டத்தில் ஒருபோதும் முன்னேற முடியாது. உன் மனத்திற்குச் சரி என்று படும் நல்ல காரியத்தைச் தயங்காது செய். பிறர் என்ன சொல்லுவார்களோ என்று அஞ்சிச் சும்மா இருந்துவிடாதே. அதைக் காட்டிலும் கோழைத்தனம் வேறில்லை.

—எமர்சன்

### சீலம்

உலகீர்! சீலமுடன் வாழக் கற்றுக் கொள்ளுங்கள். மனக் கதவைத் திறந்து சீல மாளிகையில் வாழுங்கள். அப்போது நான் ஒழுக்கத்தின் இனிமையும், ரகசியமும், சிறப்பும், உயர்வும் உங்களுக்குப் புலனாகும்.

—எமர்சன்

### மன அமைதி

உங்கள் உள்ளக் கோட்பாடுகளும், லட்சியமும் வெற்றி பெற்றால் ஒழிய, நீங்கள் மன அமைதி எய்தல் என்றும் அரிது, முயல்க.

—எமர்சன்

### சாந்திக்கு வழி

மனிதன் மனிதனை அடிமைப்படுத்துவது மனிதத் தன்மையன்று.

இன்று வானில் கந்தர்வர்கள் போன்று பறந்து செல்லும் ஆற்றல் மிக்க மக்கள், ஒருவருக் கொருவர் மிருகங்களைப் போல கொன்று வாழ விழைவது நாகரிகத் துக்கு ஒவ்வாதது.

உலகம் ஒரு குடும்பம்போல வாழலாம். சத்தியத்தை யும், அஹிம்சையையும் என்று மக்கள் கடைப்பிடித்து நடக்க முற்படுகிறார்களோ, அன்றுதான் உலகிலும், உலக மக்கள் மனத்திலும் சாந்தி நிலவும்.

—காந்தியடிகள்

நண்பனும் பகைவனும்

பகைவர்களை எதிர்த்து நிற்க என்னால் முடியும். ஆனால் நண்பர்களிடமிருந்து என்னை நீ காக்கவேண்டும்.

அறிவற்ற ஒருவனை நண்பனாய்ப் பெறுவதைக் காட் டிலும், அறிவுள்ள ஒருவனைப் பகைவனாக அடைவது மேலானது.

—சுவாமி துரியாநந்தர்

வாழ்விலே உயர்ந்தது

வாழ்விலே உயர்ந்தது சீலமுடைமை
சீலத்தினால் விளைவது விவேகம்
விவேகத்தால் உண்டாவது வைராக்கியம்
வைராக்கியத்தால் வருவது சாந்தி.

—சுவாமி துரியாநந்தர்

அன்பு தழைக்க

மனிதனுக்கு மனிதன் மெய் நட்புப் பாராட்டி தீவிர நட்புறவுடன், வீட்டுக்கு வீடு, நாட்டுக்கு நாடு நெருங்கிப் பழகினால் வேற்றுமை நீங்கும். ஒற்றுமை ஓங்கும், அன்பு தழைக்கும்.

இத்தன்மை இலக்கியத்திலும், அரசியலிலும் ஒருங்கே மண்டவேண்டும்.

—வால்ட் விட்மன்

அறிவு

அறிவு விரிந்தது; விரிகிறது; விரிந்து வளர்ந்து கொண்டே இருக்கிறது. அதன் வளர்ச்சிக்குத் தடையேது? ஆன்ம அறிவே அறிவு. அதைப் பள்ளியில் பயில இயலாது; நூல்களில் காண இயலாது; சொந்த அனுபவத்தால் உணர்தற்கு உரியது. அது சாவற்றது; நிலையான பொருள்.

—வால்ட் விட்மன்

நீ

உன்னுள் சிறந்தது நீதான். பிறரைக் கண்டு இரங்காதவன், விலங்கினும் இழிந்தோன். வருந்துவோரை அணைக்க உன் அன்புக் கரங்களை உதவு; தயங்காதே.

—வால்ட் விட்மன்

தவறான துறவு

தர்ப்பைப் புல்லைத் தவறாக இழுத்தால், அது கையை அறுத்துவிடுகிறது; அதுபோலவே தீய வழியில் பயிலும் துறவறமும் ஒருவனை நரகத்தில் சேர்க்கிறது.

—தம்மபதம்

தாயகம்

உலகந்தான் என் தாயகம்; அதற்கு நன்மை செய்வதே என் சமயக்கோட்பாடாகும். உண்மை ஒன்றை என் ஆருயிர்த் தோழன்.

கேவலம் பணம் சம்பாதிப்பதற்காக நீ ஒழுக்கத்தை விற்றுவிடாதே; நானும் விற்கமாட்டேன்.

—தாமஸ் பெய்ன்

சுதந்திர நாடு

ஒரு நாடு சுதந்திரமடைந்த பிறகு, அது நிலைக்க வேண்டுமானுல், அதன் விரோதிகளும்கூட கொடுங் கோன்மைக்கு ஆளாகாமல் நடத்தப் பெறவேண்டும்.

—தாமஸ் பெய்ன்

நண்பர்கள்

ஒரே நபர்மீது கோபங்கொண்ட இரு பெண்கள்!

தத்துவ ஞானி

தத்துவஞானி என்பவன் தனக்கு ஏதேனும் நிகழும் வரை, அதற்காக என்ன செய்வதென்று அறிய முடியா தவன்.

—ஹென்றி ஹாஸி

கோபம்

வழி தவறிச் செல்லும் இரதம் போலப் பொங்கி வரும் கோபத்தை அடக்கி யாள்பவனையே நான் சரியான சாரதி என்று சொல்லுவேன்; மற்றையோர் கடிவாளக் கயிற்றைக் (கையில்) வைத்திருப்பவர்களே.

வெகுளியை விநயத்தால் வெல்ல வேண்டும்; தீமையை நன்மையால் வெல்லவேண்டும்; பொய்யனை மெய்யால் வெல்ல வேண்டும்.

—தம்ம பதம்

# அரக்குத் தொழில்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருஷத்தில் பதின்மூன்றரை லட்சம் மணங்கு கொம்பரக்கு உற்பத்தியாகலாம். இது ஏற்கெனவே உள்ள உற்பத்தியைவிட இரண்டு லட்சம் மணங்கு அதிகம்.

அரக்கு அனேக காரியங்களுக்குப் உபயோகப்படுகிறது. அவலரக்கைப் போல் மரத்தின் இயற்கை அழகைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டுகிற எந்தவித ரோசனமும் இதுவரையில் யாரும் கண்டுபிடிக்கவில்லை. எனவே, அரக்கானது மரத்துக்குப் பாதுகாப்புக்காகவும் மெருகேற்றுவதற்காகவும் பூசப்படுகிற பிரஞ்சு பாலிஷாகவும் தரைப் பாலிஷாகவும் பிரதானமாய் உபயோகிக்கப் பெறுகிறது. அவலரக்கானது மிட்டாய்களுக்குப் பளபளப்புக் கொடுப்பதற்காகவும், மாத்திரைகளுக்கு மேல் பூச்சுக் கொடுப்பதற்காகவும் உபயோகமாகிறது; மேலும் அச்சு மைகள், பீங்கான், மைகள், உலோக ரேக்கு பாலிஷ், மின்சார இன்ஸுலேட்டர்கள், இசைத் தட்டுகள் முதலியவைகளின் தயாரிப்புக்கும் அவலரக்கு உபயோகமாகிறது. அரக்குப் பூச்சுள்ள மண்பாண்டங்கள், அரக்குத் தயாரிப்புச் சாமான்கள்: முத்திரை மெழுகு, பசைப் பொருள்கள், எண்ணெய்ப் பூச்சுத் துணிகள், உப்புக் காகிதங்கள் முதலிய தொழில்களும் அரக்கை உபயோகிக்கின்றன.

அரக்குப் பூச்சியின் உடல் முழுவதிலுமுள்ள சுரப்பிகளிலிருந்து வெளியாகி, காற்றில் உறைந்து பூச்சிக்கு

தக்க கூடுபோல் அமையும் பிசின்தான் அரக்கு. மைசூர், பீகார், மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், அஸ்ஸாம் ஆகியவிடங்களிலுள்ள பல்வேறு வகையான மரங்களில் அரக்குப் பூச்சிகள் செழித்து வாழ்கின்றன. அரக்குப் பூச்சியின் குஞ்சுகள் தாய்க்கூண்டை விட்டு ஊர்ந்து வெளியே வந்து சிறிது நேரத்துக்குள் அவை சாறுள்ள மரத்தின் பசுங்கிளைகளில் ஒட்டிக்கொண்டு, கெட்டியான பாகு போன்ற அரக்குப் பிசினைக் கசிகிறது. காற்றுப்பட்டதும் இப்பிசின் இறுகி, திடப்பொருளாகி பூச்சியின் உடம்பைச் சுற்றி உறுதியான உறைபோல் அமைகிறது. அரக்கு உற்பத்தியைத் தொடங்குவதற்கு விரோதிப் பூச்சிகளால் அரிக்கப்படாத அரக்கு புழுக்குச்சிகளை (புரூட்லாக்) தகுந்த அரக்கு விளையும் மரங்களில் கட்டி பயிரேற்ற வேண்டும். அவ்வாறு அரக்குப் படிந்துள்ள குச்சிகளை அம்மரங்களிலிருந்து வெட்டி எடுத்து, அந்த அரக்கைச் சுரண்டி எடுக்கவேண்டும். இதற்குக் கொம்பரக்கு என்று பெயர். கொம்பரக்கைக் கழுவிச் சுத்திகரித்து மணி அரக்குத் தயாரிக்கின்றனர்; கொம்பரக்கை உருக்கி அல்லது கரைத்துச் சுத்திகரித்து அவலரக்குத் தயாரிக்கின்றனர்.

சோட்டா நாகபுரியைச் சேர்ந்த மலைப் பிரதேசங்களில் வாழ்கிற ஆதிவாசிகளில் சுமார் 50 லட்சம் பேருக்கு அரக்கு உற்பத்தி ஒரு துணை வருமான ஆதாரமாக விளங்குகிறது. அதிலிருந்து, நாட்டின் பொருளாதாரத்தில் அரக்கு எவ்வளவு முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது என்பது புலனாகும். மேலும், வருஷத்துக்குச் சராசரியாய் 10 கோடி ரூபாய் வரையில் அன்னியச் செலாவணியை இது சம்பாதித்துத் தருகிறது. அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி ஆகியவை அரக்கை இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகளாகும்.

திட்ட நடவடிக்கைகள்

அரக்கைத் தர நிர்ணயம் செய்வதற்காகவும் தரப்பாகு பாடு செய்வதற்காகவும் நடவடிக்கை எடுத்தனர். இந்திய அரக்கு ஆராய்ச்சி நிலையம் அரக்குத் தர வரை யறைகளை வகுத்திருக்கிறது; இந்த வரையறைகள் இந் தியத் தர நிர்ணய நிலையத்தால் பின்பற்றப்படுகின்றன. இந்திய அரக்குத் தீர்வைக் கமிட்டி கொம்பரக்கு உற்பத் தியை அபிவிருத்தி செய்யக்கூடிய பிரதேசங்களில் சர்வே ஒன்றையும் நடத்தியிருக்கிறது.

அரக்குத் தொழிலின் அபிவிருத்தி, விஸ்தரிப்புக்காக சுமார் 55 லட்சம் ரூபாய் செலவுள்ள திட்டங்கள் இரண் டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ந்துள்ளன. பீகாரில் 20 புழுக்குச்சிப் பண்ணைகள் அமைத்துள்ளனர். இதர ராஜ்யங்களிலும் இதுபோன்ற நடவக்கைகள் மேற் கொண்டுள்ளனர். அதோடுகூட, புழுக்குச்சிப் பண்ணை களை ஏற்படுதுவதில் ராஜ்ய அரசாங்கங்களுக்கு உதவி யளிப்பதற்காக இந்திய அரக்குத் தீர்வைக் கமிட்டி 14 மூலக்கரு புழுக்குச்சிப் பண்ணைகளை ஏற்படுத்த விருக் கிறது. இதற்கான வேலை ஆரம்பமாகிவிட்டது.

அரக்கின் விலையை உறுதிப்படுத்தும் நோக்கத் துடன் போதிய சேமிப்புக் கிடங்கு வசதிகளை ஏற்படுத்த வும் உத்தேசித்துள்ளனர். கல்கத்தாவில் சம சீதள ஏற் பாடு வசதியுள்ள சேமிப்புக் கிடங்கு ஒன்றைக் கட்டுவதற் காக இடம் தெரிந்தெடுத்தனர். அதில் 25,000 மணங்கு அரக்கைச் சேமித்துவைக்க வசதி உண்டு. தேசீய விஸ் தரிப்புப் பயிற்சி நிலையங்களைச் சேர்ந்த போதகாசிரியர் களுக்கு அரக்கு உற்பத்தியில் ஒரு மாத காலப் பயிற்சி யளிப்பதற்காக இந்திய அரக்கு ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்பாடுகள் செய்துள்ளனர். போரக்ஸ் உப்பு, காரச்சத்து

ஆகியவை போன்ற சாதாரணமானதும் மலிவானது மானதும் ரசாயனப் பொருள்களை உபயோகித்து மணி அரக்கின் தரத்தை அபிவிருத்தி செய்வதற்கான முறைகளைக் கண்டுபிடித்துள்ளனர். மணி அரக்கிலுள்ள மணல் முதலிய தூசிகளைப் பிரிப்பதற்கான ஒரு யந்திரம் உருவாக்கப் பெற்றிருக்கிறது; உருக்கிய அரக்கைத் தகடாகச் செய்வதற்கான ஒரு யந்திரம் உண்டு. மணி அரக்கு, அவலரக்கு ஆகியவைககளின் பகுப்பாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்களுக்கு உதவியளிப்பதற்காக நான்கு பிராந்திய பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் அமைக்க எண்ணியுள்ளனர். அவற்றில் ஒன்றை ஏற்கெனவே கோண்டியாவில் ஏற்படுத்தியுள்ளனர்.

அவலரக்கின் ஏற்றுமதிகளைப் பெருக்குவதற்காக இரண்டு வருஷங்களுக்கு முன் அவலரக்கு ஏற்றுமதி அபிவிருத்திக் குழு ஒன்றை ஏற்படுத்தினர். அரக்கு விலைகள் உறுதியாக இருக்கும்படி பார்த்துக்கொள்வதற்காக அரக்கு ஏற்றுமதிகள் லைசென்ஸ் விதிப்பு முறையின்கீழ் வத்துள்ளன. இதன்படி, இந்திய அரக்கு ஏற்றுமதியாளர்கள் சங்கத்தில் பதிவு செய்துகொண்டுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு மட்டும்தான் லைசென்ஸ் கிடைக்கும். அரசாங்க வர்த்தகக் கார்ப்பொரேஷன், ருஷ்யா, சீனு, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவைகளுக்கு அரக்கை விற்க முயன்று வருகிறது.

எதிர்கால நடவடிக்கைகள்

மூன்ருவது திட்டத்துக்கு அரக்கு உற்பத்திக்கான தாற்காலிக லட்சிய அளவு 17 லட்சம் மணங்காக நிர்ணயித்துள்ளார்கள். அரக்கு உற்பத்தியைப் பெருக்கப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பெறும். மேலும் பல

புழுக்குச்சிப் பண்ணைகளும், மூலக்கரு புழுக்குச்சிப் பண்ணைகளும் அமைக்கப்பெறும்.

இந்நாட்டிலுள்ள அரக்குச் சுத்திகரிப்புச்சாலைகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்; அதாவது கல்கத்தாவில் இரண்டு யந்திரத் தொழிற்சாலைகள் இருக்கின்றன; அது தவிர, மாமூல் உள்நாட்டு முறைகளைப் பின்பற்றுகிற சுமார் 400 தொழிற்சாலைகள் இருக்கின்றன. இரண்டாவது ரகத் தொழிற்சாலைகளில் நவீன யந்திர சாதனங்கள் அமைப்பதற்காக கடனுதவி அளிக்க நேரிடும்.

மேஜை, நாற்காலி வகையறுக்களுக்கு மறுமுறை மெருகு கொடுக்கும் பழக்கம் அதிகரித்தால், அரக்கின் உள்நாட்டு உபயோகம் அதிகரிக்கும்.

சலவை அரக்கு இப்போது மேற்கு ஜெர்மனி, பிரிட்டன் அமெரிக்கா ஆகியவிடங்களில் மட்டும்தான் தயாரிக்கப்பெறுகின்றன. அத்தகைய சலவைத் தொழிற்சாலைகளை இந்தியாவில் ஏற்படுத்த முடிந்தால், ருஷ்யா, சீனா, போன்ற நாடுகளிலும் இதற்கு நல்ல கிராக்கியிருக்கும்.

# வள்ளுவர் உபதேசம்

மு. அருணுசலம்

மக்கள் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்து காணப் படுகின்றன. எல்லோரும் இன்பத்தையே வேண்டுகிருர்கள். இன்பம் பெற வேண்டித் தங்கள் வாழ்க்கையையும் அதற்கான வழிகளையும் வகுத்துக் கொள்கிருர்கள். எவ்வளவோ திட்டம் போடுகிருர்கள். சில சமயம் இத்திட்டங்கள் நிறைவேறி, நினைத்த காரியம் கைகூடி இன்பம் பிறக்கிறது. ஆனுல் வேறு சில சமயம் திட்டமிட்ட காரியம் நினைத்தபடி நடப்பதில்லை. இது மனத்துக்குத் துன்பம் தருகிறது. வேறு விதத்திலும் துன்பம் விளைகிறது. துன்பத்தைத் தாமாக யாரும் தேடுவதில்லை. இருந்தாலும், அது தாஞக வந்து பற்றுகிறது. அப்போது மனம் மிகவும் வேதனை அடை கிறது. வேதனையிலிருந்து விடுதலை பெற எவ்வளவு தான் எண்ணின போதிலுங்கூட, விடுதலை கிடைப்ப தில்லை. பல சமயம் இவ்வாறு நடக்கிறது. துன்பப் பட்டுத் துன்பப்பட்டு மனம் பழகிப் போகிறது. பிறகு உலகியற்கை துன்பமே என்ற முடிவுக்கு மனிதன் வரு கிருன். இந்த நிலைக்குப் பரிகாரம் எதுவும் அவன் அறிவதில்லை. அப்போது, தன்னையும் கடந்த ஒரு சக்தி, தன்னையும் பிறரையும் ஆட்டி வைக்கிறது என்று எண்ணுகிருன். இதை விதி என்றும், தெய்வம் என்றும் பலபல பெயர்கள் கொடுத்துக் குறிப்பிடுகிருன். இப் படிக் குறிப்பிட்டுப் பழகியபின், எல்லா விஷயங்களையும்

அந்த விதியே நிர்ணயிக்கிறது, தனக்கென்று செயல் ஒன்றும் இல்லை என்று முடிவு செய்கிறான். பலர் செய்த முடிவுகளும் கருத்துக்களும், பல பல சமயங்களாக விளங்குகின்றன. இவன் தான் கொண்ட முடிவின்படி ஒரு தெய்வத்தை ஏற்றுக் கொண்டு, அதற்கு வழிபாடு செய்வதே தன் வாழ்க்கையில் வரும் இன்பம் துன்பங்களை ஒருமுகப்படுத்தும் வழி என்று கருதுகிறான். சமயவழிபாடு, அதன்மூலம் உண்மையைக் காணுதல், அவ்வுண்மையே பெரு ஞானம் என்ற கருத்துக்கள் பிறந்து வளர்கின்றன.

இப்படி வளர்ந்துள்ள நிலையில், இதன் பல அம்சங்கள் பற்றியும் திருவள்ளுவர் என்ன வழி காட்டுகிறார் என்பதை நாம் அறிதல் வேண்டும். திருவள்ளுவர் செய்த திருக்குறளை நாம் நெடுங்காலமாக, பொது மறை, தமிழ் வேதம் என்ற பெயர்களால் போற்றி வந்திருக்கிறோம். "எல்லாப் பொருளும் இதன் பால் உள இதன் பால் இல்லாப் பொருளொன்று இல்லை" என்றும், குறளால் "பொய்ப்பால் பொய்யேயாய்ப் போயின, பொய்யல்லா மெய்ப்பால் மெய்யாய் விளங்கின" என்றும் பெரியோர் சொல்லுகிறார்கள். ஆதலால் நமக்கு ஏற்பட்டுள்ள பிரச்னைகளைப் போக்குமாறு திருவள்ளுவரைக் கேட்கலாம்.

வாழ்க்கை நிலையில்லாதது. இதை எல்லோரும் அறிந்திருந்தாலும் மறந்துவிடுகிறார்கள்.

நெருநல் உளனொருவன்
இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் உலகு

என்கிறார் திருவள்ளுவர். பெருமை என்ற சொல்லாலே இந்த நிலைமையின் இழிவையும் மனத்தில் தைக்கும்படி காட்டுகிறார். இந்தப் பெருமையையே, வாழ்க்கையில்

JL 143834
M211, N44 KM N59.16.3

முடிந்த பொருளாய்த்தேடி மக்கள் அல்லல் உறுகிருர்கள். அல்லல் உறுவது உண்மை. அல்லலைப் போக்க மேற்கொள்ளும் முயற்சிகளும் இவற்றைத் தோற்றுவிக்கும் நினைவுகளும் அளவில்லாதன. இவை மேலும் மேலும் அல்லல் தருகின்றனவேயன்றி, வாழ்க்கையை அமைத்துத் தரவில்லை. வாழும் வகை யறியாமலே மக்கள் துன்புறுகிருர்கள்.

ஒருபொழுதும் வாழ்வ
தறியார் கருதுப,
கோடியும் அல்ல, பல.

இப்படியாக, அல்லலுக்கு அடிப்படைஆசை. இன்பம் வேண்டும் என்ற ஆசை; தணிக்கமுடியாத ஆசை; வேண்டும் என்பதற்கு எல்லை கோல முடியவில்லை. போதும் என்ற நிலை வருவதே இல்லை. இது துன்பத்துக்கு வித்து. துன்பம் குறைய வேண்டுமானுல் இந்த ஆசையை நீக்க வேண்டும்.

ஆரா இயற்கை
அவாநீப்பின், அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

ஆசைகளைப் பெருக்கிக் கொண்டு போகப் போக இவை ஒவ்வொன்றும், கிட்டி அனுபவிக்கும்போதும், கிட்டாத போதும், துன்பம் தருகிறது; ஆசைகளை ஒவ்வொன்ருய் விட்டு நீங்க நீங்க, அவை தரும் துன்பமும் இல்லாமற் போகிறது.

யாதனின் யாதனின்
நீங்கியான், நோதல்
அதனின் அதனின் இலன்.

இன்பமும் துன்பமும், பகலும் இரவும்போல, ஒன்றையொன்று தொடர்ந்தே தவருமல் வருகின்றன. ஆதலால்

இன்பம் தேடும்போது துன்பமும் தொடர்ந்து வருகிற தென்றால், துன்பத்திலிருந்து விடுதலை பெறுவது தனியே நடைபெறவில்லை. இன்பம் வருங்காலத்தில் அதன்கண் மனம் பற்றுமலிருக்க ஒருவன் பழகினால், துன்பத்திலும் பற்றுதல் இல்லை; மனம் பற்றாத போது, இன்பமும் இல்லை, துன்பமும் இல்லை; இதுவே ஆசையை அறுத்த நிலை.

இன்பத்துள் இன்பம்
விழையாதான், துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்.

இன்பமும் துன்பமும் அவரவர் தலைவிதியால் வருவன என்று சிலர் சொல்லுவார்கள். இதையும் அவர் ஓரளவு ஒப்புக் கொள்கிறார். நம் சூழ்ச்சியிலும் பார்க்க, விதியின் வலிமை அதிகம் என்றே அவர் கூறுகிறார்.

ஊழிற் பெருவலி
யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

இப்படிக் கூறிவிட்டால், பிறகு மனிதனுக்குச் செய வில்லை. சோம்பலுக்கு இது இடங் கொடுத்து, மனித னிடம் அமைந்துள்ள ஆற்றல்கள் யாவும் வெளிப்பட்டுப் பூரணப் பொலிவு பெறச் சந்தர்ப்பம் இல்லாதுபோகும். இது வாழ்க்கைக்கு ஒவ்வாத நிலை; சமூக வளர்ச்சிக்கும் இது பொருந்தாது. ஆகவே இது திருவள்ளுவருக்குப் பொதுவாய் உடன்பாடன்று. அவர் தம் அனுபவங்களைத் திரட்டி நூலாகத் தொகுத்தபோது தாம் மனத்தில் நெடு நாள் சிந்தித்துவைத்த பேருண்மைகள் மக்கள் வாழ்க்கை மேம்படச் செய்ய வேண்டுமென்றே எண்ணினார். விதியை மதியால் வெல்லலாம் என்று மட்டும் சொன்னால் போதாது; மனிதன் செயல் செய்தே வாழ வேண்டியவன்

என்று உபநிஷத்துக் கூறுகிறபடி, உழைப்பினுல்தான் ஊழையும் தன் பக்கம் திருப்ப முடியும் என்று இவர் கூறுகிருர்.

ஊழையும் உப்பக்கம்
காண்பர்; உலேவின்றித்
தாழாது உஞற்றுபவர்.

தன்னிற் பெருவலி யில்லாததாகிய ஊழைத் தன் பக்கம் திருப்ப, உஞற்றுதல், அதாவது உழைப்பு வேண்டும்; அதுவும் தாழாத சோர்வில்லாத உஞற்றுதல் வேண்டும்.

தாழாது உழைக்க, என்பதைப் பலபல சந்தர்ப்பங்களில் பலபலவிதமாகக் கூறுகிருர். பயிர்த்தொழில்பற்றிக் கூறுகையில், தான் வறியவன் என்று ஒருவன் சோம்பியிருப்பானுனல், பூமியே அவனேப் பார்த்து நகைக்கும் என்கிருர்;

இலமென்று அசைஇ
இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள், நகும்.

நல்லவிதி ஒருவனுக்கு இல்லாமை பழியாகாது; ஆனுல் அறிவோடு அவன் உழைக்காமையே பழியாகும்.

பொறியின்மை யார்க்கும்
பழியன்று; அறிவறிந்து
ஆள்வினே யின்மை பழி

முயற்சியுடையவன் நிலேமை வேறு.

குடிசெய்வல் என்னும்
ஒருவற்குத் தெய்வம்,
மடிதற்றுத் தான்முந் துறும்.

அவனுக்குந் தெய்வமே தோன்றித் தன் மேல்வேட்டியை இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு முன்னே நின்று

உழைக்குமாம். இவ்வாறு அவர் பல இடங்களிலும் பல வகையாகக் கூறியுள்ள தன் கருத்து, வாழ்க்கையில் சோம்பலுக்கு இடங்கொடாதபடி எல்லோரும் உழைக்க வேண்டும் என்பதாம்.

திருவள்ளுவர் அருளிய உபதேசங்கள் அனைத்திலும் அவரவர் தம் வாழ்க்கையின் மேம்பாட்டுக்கான முயற்சியைத் தாமே மேற்கொள்ள வேண்டும் என்ற இந்த உபதேசம் பெரிதும் கருதற்பாலது. எந்த உபதேசத்தையும் வாழ்க்கையோடு பொருத்திப் பார்க்காமல் ஏட்டளவில் மட்டும் ஆராய்ந்தால் போதாது. தவிர, காலநிலைமையும் கவனித்தற் குரியது. இந்திய நாடு மிக்க ஜனத்தொகை கொண்டது. இந்நாட்டு மக்கள் அனைவரும் ஏழைகள் இவர்களுடைய வாழ்க்கை மிகவும் கஷ்டமான நிலைமையில் உள்ளது. அயல்நாடுகளில் விசேஷ முன்னேற்றமுடைய நாடுகள் யாவும் பொருளை உற்பத்தி செய்து வேறிடங்களில் கொண்டு போய் விற்பனை செய்வதைத் தொழிலாக உடையவை. ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் அமெரிக்கா முதலான எல்லா நாடுகளும் இந்த வழியிலேயே நிற்பன. அங்குள்ள மக்கள் யந்திர முறையில் செய்கிற அளவில்லாதபொருள்களைவிற்பனை செய்வதற்கு மற்ற நாடுகளை ஆக்கிரமித்தாக வேண்டியிருக்கிறது. ஆக்கிரமிக்கப் பெற்ற நாடுகள் அடிமை நிலை அடைகின்றன. இப்படியாக மேலை நாட்டு வாழ்க்கை முறையிலே யந்திர உற்பத்தியைப் பெருக்கி ஜீவன உழைப்பைக் குறைக்க வேண்டும் என்ற முயற்சி பெருத்த அதர்மத்தில் போய் முடிகிறது. இந்தியா சமீபகாலம்வரை இருந்து வந்த சுதந்திரமற்ற நிலை, இந்த அதர்மத்துக்கு ஓர் உதாரணம். தளராது உழைக்க வேண்டுமென்று திருவள்ளுவர் கூறும்போது, அவரவர் தம் ஜீவனத்தை நடத்தப் பிறர் கையை எதிர்பார்க்கலாகாது என்பதே பொருளாகிறது.

இதையே மற்ருேரிடத்தில், தன் முயற்சியால் கிடைக்கக் கூடிய உணவு தெளிந்த நீர் போன்ற கூழே ஆயினும், அதைப்போல் இனிய உணவு வேருென்றில்லை என்று அவர் கூறுகிருர்.

> தெண்ணீர் அடுபுற்கை
> யாயினும், தாள்தந்தது
> உண்ணலி னூங்கினிய து இல்.

இது சுதந்திர இந்திய மக்களுக்குத் திருவள்ளுவர் விடுக்கும் செய்தி எனவும் கருதலாம். காந்தியடிகள் சுதேசி என்று அடிக்கடி கூறியதெல்லாம் கேவலம் அன்னியத்துணி பகிஷ்காரம் முதலியன அல்ல. இந்தியச் சுதந்திர இயக்கத்தின் ஆரம்ப நிலையில் அந்தப் பிரசாரம் ஒருகால் வேண்டியிருந்திருக்கலாம். ஆனுல் சமீப காலத்தில் பூரண சுதேசியம் என்றும் சுய தேவைப்பூர்த்தி யென்றும் காந்தியடிகள் சொல்லி வந்ததன் கருத்துக்கும் திருவள்ளுவர் கூறும் உபதேசத்துக்கும் வித்தியாசமில்லை.

நம்முடைய நாட்டிலே நித்திய வாழ்க்கைக்கும் ஆன்மார்த்த வாழ்க்கைக்கும் வேறுபாடு இல்லை. ஞானம் என்பது இரண்டு வாழ்க்கைக்கும் பொருந்துவது. உலக வாழ்க்கையை விட்டுப் பிரிந்து தனியே நிற்கும் வறட்டு வேதாந்தம் உண்மையான ஞானமாகாது. மனம் ஞானத்தை ஆராய்கிறது. உடலோடு உயிர் ஒன்றும் போதுதான் மனம் இருக்கிறது. ஆகவே ஞானம் என்பது உடலுக்கும் உள்ளத்துக்கும் உயிருக்குமே ஊட்டம் தருவது.

இதுவரை நாம் கூறிய கருத்துக்களால் சோர்வற்ற உழைப்புக்குத் திருவள்ளுவர் எவ்வளவு முக்கிய இடம் தந்திருக்கிருர் என்பது விளங்கும். எல்லோரும் விரும்புவது ஆன்ம சுதந்திரம். தினசரி வாழ்க்கையில் இருக்க

வேண்டிய சுதந்திரம் இன்றி மேலான பிற சுதந்திரம் கிட்டாது. இதை இக்கருத்துக்கள் வலியுறுத்தும்.

தினசரி வாழ்க்கையில் அமைய வேண்டிய சுதந்திரத்தை நம் ஆசிரியர் மற்ருெரு வகையிலும் வற்புறுத்திச் சொல்லுகிருர். அவரவருடைய நன்மைக்கும் தீமைக்கும், பெருமைக்கும் சிறுமைக்கும், கட்டளைக்கல் என்று சொல்லத் தக்கது, அவரவருடைய செய்கையே. இங்கு விதி என்ற பேச்சே இல்லை.

பெருமைக்கும், ஏனைச்
சிறுமைக்கும் தந்தம்
கருமமே கட்டளைக் கல்

மற்ருேரிடத்தில் உலகத்திலே தனக்கு இணையாக அழியாமல் நிற்க வல்லது புகழ் ஒன்றுதான் என்று கூறுகிருர். அந்தப் புகழைத் தருவதும் அவரவர் செய்கை ஒன்றுதான் என்று இங்கு நாம் காண்கிருேம்.

காந்தியடிகள் தம் வாழ்க்கையில் ஒரு பெரிய தத்துவத்தைக் கடைப்பிடித்தார். அதற்கு அவர் கொடுத்த பெயர் சத்தியம் என்பது. சத்தியம் என்பது சொல்லளவில் உண்மை பேசுவது மாத்திரமன்று: சொல்லில் வாய்மையும், செயலில் மெய்ம்மையும் உள்ளத்தில் உண்மையும் பெற்றிருத்தலே சத்தியமாகும். இந்தச் சத்தியம் நிரம்பி இழுத்த காரணத்தால் காந்தியடிகள் எல்லோருடைய உள்ளத்திலும் இருந்து வந்தார், இன்றும் இருக்கிருர். மூன்று வகையிலும் அவர் வாழ்க்கையில் பொய்ம்மையே கலந்ததில்லை. மூன்றிலும், உள்ளத்தில் பொய்ம்மை நீக்குதலே சிறப்பு. காந்தியடிகளுக்கு இலக்கணம் கூறியது போல், திருவள்ளுவர் இதையே கூறுகிருர்.

உள்ளத்தாற் பொய்யாது
ஒழுகின், உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்

எவ்வளவு பொருத்தமான வார்த்தை !

இந்தச் சத்தியத்திலிருந்து வேறில்லாத மற்ருெரு தத்துவம் அன்பு. கடவுளை அடைய நாடுகின்றவனுக்கு அன்பே பரமான தெய்வம். அன்புடையார் தங்கள் எலும்பையும் உதவத் தயங்கமாட்டார்கள் என்று திருவள்ளுவர் கூறும்போது, இவ்வுண்மையிலே வெளிப்படுகின்றது. தான் என்பது அன்பே கடவுளாகக் கொண்டவனிடம் இல்லை.

தன்னுயிர் தானறப்
பெற்ருனை, ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.

அவனை எல்லா உலகமும் தொழும் என்று திருவள்ளுவர் கூறும்போது நமக்கு ஒருவேளை பொருள் விளங்காமல் போகலாம். ஆனல் காந்தியடிகள் வாழ்க்கையில் இதை நாம் திட்டமாகக் காண்கிறோம். சத்தியமும் அன்பும் ஒரு பெருங் கடவுளாகக்கொண்டு வாழ்ந்த அவரது வாழ்க்கையானது உலகத்தார் எல்லோரும் வழிபடும்படியாக அமைந்திருந்தது.

இதுவே திருவள்ளுவர் நமக்குக் காட்டுகிற ஞான மார்க்கம். சாமானிய உலகியல் சுதந்திரத்தின் பொருட்டு அனைவரும் உழைத்து வாழக் கடமைம் பட்டவர்கள். உழைப்பின் மூலமே அவரவருக்கு ஏற்றமும் தாழ்வும் வரும். இந்த உழைப்பிற்கு ஆன்மபலம், சத்தியமும் அன்பும். இந்த மூன்றும் பொருந்திய அவர் சொல்லும் பிற கருத்துக்கள் அனைத்தும் இந்த நெறிக்குத் துணை செய்வன.

# சரும ஆரோக்கியம்

டாக்டர் வேங்கடேசன்.

ஒருவரின் உடல், மன வளர்ச்சிக்கு முதல் தேவை ஆரோக்கியமான, அழகான சருமம். தக்க பொருள்களைத் தேர்ந்தெடுத்து உபயோகித்தால், சருமத்தில் முன்கூட்டியே சுருக்கங்கள் விழுவதைத் தடுத்து விடலாம்.

மனம், சுவர்க்கத்தையும் நரகமாக்கிவிடும்; நரகத்தையும் சுவர்க்க மாக்கிவிடும். சருமம், மனத்தைப் படம்பிடித்துக்காட்டும் கண்ணுடி என்பது முதுமொழி. சரும ஆரோக்கியத்துக்கு மனத்திருத்தியும், அமைதியும் இன்றியமையாதவை.

இந்நாளில், அழகுச் சாதனங்களை ஆண்களும்பெண்களும் உபயோகிப்பது நாகரிகமாகி விட்டது. முன் காலத்திலிருந்தே பெண்கள், வாசனைத் தைலங்கள், சாயங்கள் பூசித் தங்களைச் சிங்காரித்துக் கொண்டார்கள். "ஒரு பெண் அழகாகத் தோன்றினல், அவள் நன்ருக இருப்பதாக நினைக்கிருள்; நன்ருக இருப்பதாக நினைத்தால், நன்கு வேலை செய்கிருள். வாசனைத் திரவியங்கள் உள்ளத்துக்குக் குதூகலமளிக்கிறது" என்று கூறுகிருர்கள்.

புராதன காலத்திலிருந்தே இந்திய ஆடவர்கள் சந்தனத்தை, குறிப்பாக வைபவ நாட்களில் விருந்துண்ட பின்னர் பூசிக்கொள்கிருர்கள். அது ஒரு திருப்தியையும், நல்ல உணர்வையும் அளிக்கிறது. அநேகர் சருமக்

கோளாறுகளால் கவலைப்படுகிறார்கள். இம்மாதிரி நிலையில் அழகுச் சாதனங்களைத் திறம்பட உபயோகித்தால் தோற்றங்களை நல்ல விதமாக மாற்றிவிடலாம்.

கல்லூரிகளில் சேர்வதற்கும், வியாபார நிலையங்களில் வேலை பெறுவதற்கும், கல்யாணம் செய்து கொள்வதற்கும் இந்நாளில் பெரும் போட்டி ஏற்பட்டிருக்கிறது. எனவே, இக்காலத்தில் தோற்றத்தின் மதிப்பு பெரிதும் உயர்ந்து விட்டது. நன்கு தெரிந்தெடுத்து உபயோகித்தால், அழகுச் சாதனங்கள் மாபெரும் வரப்பிரசாதமாகி விடும். சிலர்மீது துர்நாற்றம் அடிப்பது உண்டு. இதற்குத் துர்நாற்ற மகற்றும் பொருள்களை உபயோகிக்கலாம்.

துரதிர்ஷ்டவசமாக, நம்மில் அநேகருக்கு அழகுச் சாதனங்களை உபயோகிப்பதன் பயன்கள் தெரியா. அதனைத் தவறானவழியில் உபயோகிக்கின்றனர்; அல்லது தூற்றுகின்றனர்; சில சமயங்களில் சிலர் கோமாளியைப் போன்று முகப்பவுடர்களை அப்பிக்கொண்டு வருவதைப் பார்க்க நமக்கு அருவருப்பாய் இருக்கிறது.

இதே மாதிரி நம் சமூகத்தில் உதட்டுச் சாயம் பூசுவதையும் ஆட்சேபிக்கின்றனர். இதற்குக் காரணம், எது பொருத்தமான சாயம் என்பதைத் தேர்ந்தெடுக்காததே யாகும். வெற்றிலை போடுவது உதட்டுக்கு வர்ணம் தீட்டுகிறது. ஆனால் அதைத் தவறாகப் போட்டால், அதைப் போடுவதன் நோக்கமே குலைந்து விடும்.

சருமத்திலிருந்து நல்ல அல்லது குறைந்த ஆரோக்கியத்தைத் தெரிந்து கொண்டுவிடலாம். ஆகவே, அளவுடன் வைடமின் கலந்த உணவுகள் சாப்பிட வேண்டியது மிக அவசியம்.

சருமம் வரண்டு போவதற்கு, 'ஏ' வைடமின் குறைவு காரணம். முள்ளங்கி, வாழைப்பழம், பால்

வெண்ணெய், பால், முட்டையின் மஞ்சள் கரு, பச்சைக் காய்கறிகள் சாப்பிட்டு இதைப் போக்கிவிடலாம்.

'பி' வைடமின், பால், பார்லி, பச்சைக் காய்கறிகள் ஈரல், பருப்பு வகைகளில் நிறைய இருக்கின்றது. இவை பல சருமக் கோளாறுகளைச் சரிப்படுத்தும்.

நரை மயிரைக் கறுப்பாக்குவதற்குப் பயன் தரும் மருந்தில்லை என்பது எங்கள் கருத்து. கறுப்பாக்கும் தைலங்கள் எல்லாம் தாற்காலிக சாந்திதான். நரைமயிர் வந்து விட்டதே என்ற கவலை உள்பட, கவலைகளே இல்லாமல் இருப்பதே நரைமயிருக்கு நல்ல மருந்து.

அலங்காரம், தலைச் சிங்காரம் முதலியவற்றில் புகழ் பெற்ற புராதன எகிப்தியர்கள், பூனை, முதலை ரத்தம், எலி நகம், தேள் வால் ஆகிய விசித்திரப் பொருள்களை உபயோகித்துள்ளனர்.

அழகுச் சாதன தத்துவத்துக்கு மாபெரும் உதவி செய்தவர், காதல் கதையில் பிரபலமாகக் கூறப்படும் ராணி கிளியோபாத்ரோ தான்.

பல்லை வெள்ளையாக்க வீடுகளில் அநேகர் செங்கற் பொடி, வெண்சங்கு, முட்டை ஓடு, சீனிக்காரம், சாம்பிராணி ஆகியவற்றை உபயோகித்துப் பொடி தயாரிப்பது ருசிகரமான விஷயமாகும்.

சரும அழகைக் கெடுக்கும் முகப் பருக்களை, கந்தகத் தூளுடன் வெண்ணெயைக் கலந்து போட்டுத் தவிர்த்து விடலாம்,

நமது சீதோஷ்ண நிலைக்கு, எண்ணெய் தேய்த்துக் குளித்தல் நல்ல வழக்கம். சருமத்தை மழமழப்பாகவும், ஆரோக்கியமாகவும் அது வைத்திருக்கும். எண்ணெயில் கொஞ்சம் வாசனையும் சேர்த்துக் கொள்ளலாம்.

# தொழிலாளர் இயக்கம்

தொழில் துறையில் நல்லுறவுகள் நிலவுவது நாட்டின் நல் வாழ்வுக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும் இன்றியமையாதது. தொழிலாளரும், தொழிலதிபர்களும் தம் உரிமைகளோடு கடமைகளையும் உணர்ந்தால் தொழில் துறையில் அமைதி நிலவுவதற்குத் தடை ஏதும் கிடையாது.

இன்று அமெரிக்காவில் தொழிலாளர் பல நலன்களை அநுபவித்து வருகின்றனர். நல்ல சம்பளம், நியாயமான வேலை நேரம், வேலை செய்யும் இடத்தில் நல்ல சூழ்நிலை, சுகாதாரத் திட்டம், பொதுநலத் திட்டம், முதுமைக்கால பென்ஷன் ஆகியவையெல்லாம் அவர்கள் பெற்றுள்ள நலன்கள். இவை அனைத்தும் அமெரிக்கத் தொழிற் சங்கங்கள் பெற்ற வெற்றிகள் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது.

### பொது உரிமைகள்

ஒரு காலத்தில் ஓய்வு என்பது பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்த சிலரது தனி உரிமையாக இருந்தது. இப்பொழுதோ அமெரிக்க மக்கள் அனைவருக்கும் ஓய்வு கிடைக்கிறது. தொழிற்சாலை முதலாளிக்கு மட்டுமல்ல, தொழிலாளருக்கும் படிக்கவும், விளையாடவும், பண்பாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளவும், வாசிக்கவும், பிரயாணம் செய்யவும், குடும்ப வாழ்க்கை நடத்தவும் நேரம் கிடைக்கிறது.

மக்கள் அனைவருக்கும் ஓய்வு நேரம் அதிகமாகக் கிடைத்தற்குக் காரணம் தொழிற் சங்கங்களின் பணியே யாகும். அமெரிக்க வாழ்க்கையை இது மிகவும் வளப் படுத்தியது. சரித்திரம் காணாத புதுமை இது. சுகாதார, பொதுநலத் திட்டங்கள் மிகவும் வளர்ச்சி பெற்றுள்ளன. அது குறித்தும் அமெரிக்கர் பெருமை கொள்ளலாம். அண்மையில்தான் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதற்குள் இதன் பயன் நாட்டின் சுகாதாரத்திலும் பொது நலத்திலும் நன்கு விளங்குகின்றது.

தொழிற் சங்கங்களால் விளைந்துள்ள நலன்களை விளக்குவதற்கு இவைமட்டுமே போதும். வேலை நிலைமையையும் வாழ்க்கை வசதிகளையும் செம்மைப்படுத்துவதே தொழிற் சங்கங்களின் கடமை. ஆனால் அமெரிக்காவில் தொழிற் சங்கங்கள் இவற்றை மட்டும் செய்யவில்லை. தொழிற் சங்கங்கள் வாழ்க்கைத்தரங்களை உயர்த்தின; வாழ்க்கைத் தரங்கள் உயர்ந்தபோது, அதனால் அமெரிக்கத் தொழில் துறைக்கு அதனையொட்டி வேறு இரண்டு நலன்கள் விளைந்தன.

### வாங்கும் சக்தி

முதலாவது, பொருட்களை வாங்கும் சக்தி அதிகமானதால், பொருட்களை ஏராளமாக உற்பத்தி செய்ய வேண்டியதாயிற்று. பெருவாரியாகப் பொருட்கள் பயன் படுத்தப்பட்டதால், பெருவாரியாக அவற்றை உற்பத்தி செய்ய வேண்டியதாயிற்று. தேவைக்கு அதிகமாகத் தொழிலாளருக்கு ஊதியங் கிடைத்ததால், தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை அவர்கள் அதிகமாக வாங்கினார்கள். அமெரிக்காவிலுள்ள பணக்காரர் எல்லோரும் சேர்ந்தாலும், தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் அவ்வளவு பொருள்களையும் பயன்படுத்த

முடியாது. கூட்டுப் பேர முறையால் தொழிளாளர் அதிக மான வருவாய் பெற்றிராவிட்டால், பொருள் உற்பத்தி இவ்வளவு பெருகியிராது.

இரண்டாவது, உயர்ந்த வாழ்க்கைத்தரம் பெறத் தொழிலாளர் முயற்சி செய்து கொண்டிருந்ததால், நிர் வாகம் சிறந்த உற்பத்தி முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. எனவே, இயந்திரங்களை அதிகமாய்ப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. ஒரு ஆளின் உற்பத்தி விகிதம் கூடிக் கொண்டே வந்தது; தொழிலாளரின் ஊதியமும் உயர்ந்தது; தொழில் அதிபர்களின் ஆதாய மும் அதிகமாயிற்று.

உணவு மட்டும் போதுமா?

உணவால் மட்டும் மனிதன் உயிர்வாழ்வதில்லை. வாழ்க்கையின் மற்ற நலன்களும் அவனுக்கு வேண்டும். பொறுப்பாட்சி நிலவும் இடங்களில் முன்னேற்றமான சட்டங்கள் செய்வதற்குச் சாதாரண மக்களின் விருப்பத் தைத் தெரிவிக்கக்கூடிய சக்தி வாய்ந்த ஸ்தாபனம் அவ சியம். அமெரிக்காவில் தொழிற்சங்கம் சக்தி வாய்ந்ததாக விளங்கி வந்துள்ளது.

1828–ஆம் ஆண்டிலேயே தொழிற் சங்கங்கள் பொதுப் பாடசாலைகள் நிறுவுவதற்கும், கடன்காரரின் சிறைக்கூடங்களை ஒழிப்பதற்கும், ஆண்கள் அனைவரும் வாக்குரிமை பெறுவதற்கும் போராடியுள்ளன.

தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றவர் களுக்கும் வேறொரு பிரச்னை உண்டு. ஆளின்றி இயந் திரங்களை இயக்குவதால் தொழில் நுட்பத் துறையில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுமா என்பதே அந் தப் பிரச்னை. தொழில் அத்தகைய இயந்திரங்களைப் பயன் படுத்துவதைத் தொழிற் சங்கங்கள் எதிர்க்கவில்லை,

தனியாளின் உற்பத்தித் திறனை அவை பெருக்கும் என்பதே தொழிற்சங்கத்தின் எண்ணம். விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் அமெரிக்கா மிகவும் விரைவாக முன்னேற்றமடைய வேண்டும் என்பதே தொற்சங்கத்தின் கொள்கை.

தொழில் நுட்ப இயந்திரங்களால் வேலை இழந்தவர்களுக்கு உதவிப் பணம் அளிப்பதும், இயந்திரங்களை இயக்க அவர்களுக்குப் புதுப் பயிற்சி அளிப்பதும், அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்குவதும் அவசியம் என்று தொழிற் சங்கங்கள் உணர்கின்றன.

தொழில் நிர்வாகிகள், தொழிற் சங்கங்களைத் தங்கள் எதிரிகளாகக் கருதாமல், தொழில் உற்பத்திக்குத் துணை செய்பவைகளாகக் கருதினால், இதுவரை சொல்லப்பட்ட நலன்களெல்லாம் ஏற்படும்.

---

### மோரிஷஸ் தீவில் இந்திய மொழிகள்

மோரிஷஸ் தீவில் உள்ள மக்களில் நூற்றுக்கு அறுபத்துமூன்று பேர் இந்தியர்.

அத்தீவில் உள்ள ஆரம்பப் பள்ளிகள் 173. அவற்றில் 117 பள்ளிகளில் தமிழ், ஹிந்தி, உருது மொழிகள் போதிக்கப் பெறுகின்றன.

# சிறிய பண்ணைகளுக்கு அரசாங்க உதவி

தொழில் முன்னேற்றங்காண விரும்பும் சிறு நிலக் கிழார்களுக்கு, மானியம் முதலிய உதவிகளைத் தர பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு உத்தேசமுண்டு என்று அண்மையில் வெளியான ஓர் அறிக்கை கூறுகிறது. இதனால் 20 ஏகராக்களுக்கு மேல் 100 ஏகராக்களுக்கு உள்பட்ட சிறிய பண்ணைகள் பயனடைய முடியும். மூன்று அல்லது ஐந்தாண்டுகளுக்குள், தொழில் முன்னேற்றங் காணும் உறுதியுடன் திட்டமிட்டுச் செயலாற்றும் சிறிய பண்ணைக்காரர்களுக்கே இந்த உதவி கிடைக்கும்.

பிரிட்டனில், நவீன முறையில், யந்திர சாதன வசதி களுடன், விவசாயம் செய்வதால், நல்ல விளைச்சலைக் காண முடிகிறது. ஆயினும் விவசாயிகளுடைய பொரு ளாதார நிலை சிறப்பாக இல்லை. இதற்குப் பல காரணங் கள் உண்டு. பிரிட்டிஷ் விவசாயிகள் நிலத்தை மட்டும் நம்பி வாழவில்லை. சிறிய பண்ணைச் சொந்தக்காரர்கள், தங்களுடைய வருமானத்தை பெருக்கிக்கொள்ள, பால், முட்டை, காய்கறி முதலியவற்றையும் உற்பத்தி செய் கிறார்கள். இறைச்சிக்காக கால்நடைகளையும் வளர்க்கிறார் கள். இவற்றால் அதிக லாபமில்லை. என்றாலும், லாபந் தரக்கூடிய விளைபொருள்களை உற்பத்தி செய்ய, போது மான நிலமோ பணமோ பலரிடம் இல்லை. சிறிய பண் ணைச் சொந்தக்காரர்களுக்குள் நிலவும் போட்டியும், அவர் களுடைய முன்னேற்றத்தைத் தடுக்கிறது. ஊழியர் களுடைய எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டு

கடினமாக உழைத்தால்தான் லாபகரமாகத் தொழில் நடத்த முடியும். இதனால் தொழில் முன்னேற்றம் பற்றி சிந்திக்கப் பலருக்கு அவகாசம் கிடைப்பதில்லை.

சிறிய பண்ணைகளில் மேய்ச்சலுக்காக நிலம் ஒதுக்க முடிவதில்லை. தீவனப் பயிர்ச் சாகுபடிக்கு ஏற்ற வசதிகள் இல்லாததால், அன்றாடம் தீவனம் கொள்முதல் செய்து, கால் நடைகளைப் பராமரிக்கும் நிலையில்தான் சிறிய பண்ணைக்காரர்கள் இருக்கிறார்கள். கஷ்டங்கள் இருந்தாலும் சுதந்திரமாக வாழலாம் என்ற ஆசையுடன் விவசாயத் தொழிலை மேற்கொண்டவர்களுக்கு உதவுவதற்குத்தான், இப்போது, அரசாங்கத்தார் திட்டமிட்டிருக்கிறார்கள்.

பண்ணையின் பரப்பையும், நிலவளத்தையும், லாபகரமாகத் தொழில் நடத்தக்கூடிய வாய்ப்புக்களையும் ஆராய்ந்து, உதவியளிக்க, அரசாங்கத்தார் திட்டமிட்டிருக்கிறார்கள். உற்பத்திக்காக, உழைக்கும் நேரத்தை, 'நபர்-நாள்' விகிதத்தில் கணக்கிட்டு, ஒவ்வொரு பண்ணையின் தரத்தையும் மதிப்பீடு செய்கிறார்கள்.

அரசாங்க உதவி பெற விரும்பும் விவசாயி தன்னுடைய சக்திக்கும் வாய்ப்புக்கும் ஏற்ற முறையில் அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்து, உள்ளூரிலுள்ள விவசாய ஆலோசனை அதிகாரி மூலம், விவசாய அமைச்சகத்துக்கு அனுப்பி, அரசாங்கத்தின் ஏற்பைப்பெறவேண்டும். திட்டத்தைச் செயலாற்றத் தொடங்கிய பிறகு, நிர்ணயிக்கப்பட்ட மானியத்தை கூறுக்கி, பல தவணைகளில் வழங்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில், 275 நபர்-நாட்கள் வேலையை நிறைவேற்ற முடியுமென்பதை மெய்ப்பித்தால் அரசாங்க உதவி பெறுவதற்கான தகுதி கிடைக்கும். நிலத்தைப் பண்படுத்தல், மேய்ச்சல் நிலம் தயாரித்தல், உழவு-

இவைபோன்ற பணிகளுக்கு உபரியாக மானியம் வழங்கப் பெறும். சிறு பண்ணைகளில் தீவனப் பயிர் சாகுபடி அபி விருத்திக்கு உதவுவதே உபரி மானியத்தின் முக்கிய நோக்கமாகும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நாட்டின் உணவுத் தேவையைச் சமாளிக்க, செலவைக் கருதாமல், உற்பத்தி யில் கவனம் செலுத்துவதே அசாங்கத்தாரின் கொள்கை யாக இருந்தது. இப்போது சிறு பண்ணைக்காரர்கள், லாப கரமாகத்தொழில் நடத்த உதவவேண்டும் என்று அரசாங் கத்தார் விரும்புகிறார்கள். ஆகவே, பல தொழில்களில் கவனம் செலுத்தி, சிறிய ஊழியத்தைப் பெறுவதைவிட, லாபந்தரக்கூடிய உற்பத்தியில் தீவிரக் கவனம் செலுத்து மாறு, அதிகாரிகள், மானியம் கோருகிறவர்களுக்கு ஆலோசனை கூறுவார்கள். சாகுபடி, பால் பண்ணை கோழி வளர்ப்பு என்று எதில் கவனம் செலுத்தினாலும், லாபம் கிடைப்பதே குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

சாதாரணமாக ஒரு பண்ணைக்கு பதின்மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாததோர் தொகையை மானியமாக அளிப்பார்கள். பிரிட்டனில் விவசா யத்தை ஜீவனமாக ஏற்றுக்கொண்டவர்கள் சுமார் மூன்று லட்சம்பேர். இவர்களில் சுமார் தொண்ணூருயிரம் பேர் புதிய திட்டத்தால் பயனடையக்கூடும். முதல் ஆண் டில், தலைக்கு சுமார் மூவாயிரம் ரூபாய் வீதம் சுமார் 25,000 பேர்களுக்கு மானியம் வழங்க திட்டமிட்டிருக் கின்றனர்.

அபிவிருத்தி யோசனைகள் நிறைவேறினால், பண் ணைத் தொழில் சிறப்பாகவும் லாபகரமாகவும் நடை பெறும் என்பதில் அரசாங்கத்துக்கு நம்பிக்கை உண்டு.

# புழுபூச்சி களைகாளான் ஒழிப்பு

*(உலகம் முழுதிலும் நெடுங்காலமாக ஒரு பெரு முயற்சி நடைபெற்று வருகிறது. பயிர்களைக் கெடுக்கும் புழுபூச்சிகளையும், களைகாளான்களையும் ஒழிப்பது உலகம் தோன்றிய நாள் முதல் ஒரு பெரும் பிரச்னையாக இருந்து வருகிறது. ஆராய்ச்சிகள் நடந்த வண்ணமிருக்கின்றன: மருந்துகளைக் கண்டுபிடித்த வண்ணமிருக்கின்றனர். விளைபொருள் உற்பத்தியைப் பெருக்குவதே இடையறாத இம் முயற்சியின் லட்சியம். இதனைப்பற்றிக் கூறுவதே இக் கட்டுரை.)*

அமெரிக்காவில் உள்நாட்டுப்போர் நடந்தகாலத்தில் பிறந்த ஒரு நீக்ரோ குழந்தை பிற்காலத்தில் அமெரிக்க நாட்டின் விவசாயத்துக்கு அருந் தொண்டாற்றியது. ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் என்பது அந்தக் குழந்தையின் பெயர். ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் பிற்காலத்தில் ரசாயன அறிஞர் ஆனார். அவர் தமது அறிவைச் சாகுபடிப் பிரச்னைகளுக்குப் பயனபடுத்திப் பெரும்புகழ் பெற்றார்.

பருத்தியைப் பாழாக்கும் வண்டுகள் அதிகமதிகமாகப் படையெடுத்துப் பருத்தி விளைவைக் கெடுப்பதை 1907–ஆம் ஆண்டில் டாக்டர் கார்வர் கண்டார். எனவே பருத்திக்குப் பதிலாக வேர்க் கடலையும், சர்க்கரை வள்ளி கிழங்கும் பயிர் செய்யுமாறு அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார். அவற்றை மிகுதியாகப் பயிர் செய்தால் அவற்றை விற்பதற்கு வழி செய்யவேண்டும். அதன் பொருட்டு டாக்டர் கார்வர் ஆராய்ச்சி நடத்தினர். வெப்

-த்தையும் அமுக்கத்தையும் பயன்டுத்தி, அவர் ஆராய்ச்சி செய்து சர்க்கரை வள்ளிக்கிழங்கிலிருந்து 118 பொருட்களும், வேர்கடலையிலிருந்து 300 பொருட்களும் உற்பத்தி செய்தார்.

அலபாமாவிலுள்ள என்டர்பிரைஸ் என்னும் நகரத்தின் முக்கியமான தெருவில் பயிர்களைப் பாழாக்கும் ஒரு வண்டுக்கு நினைவுச் சின்னம் ஒன்று உள்ளது. உலகில் வேறெங்கும் அதற்கு நினைவுச் சின்னம் இல்லை. வண்டுகள் பயிர்களைப் பாழாக்கியதால், டாக்டர் கார்வரின் சொற்படி, வேர்க்கடலை பயிர் செய்து பெரும்பொருள் ஈட்டிய மக்கள் வண்டுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவிக்க நாட்டிய சின்னம் அது. "வாழ்வுக்கு வழிகாட்டிய வண்டுக்கு நன்றி" என்று அந்த நினைவுச் சின்னத்தில் பொறிக்கப் பெற்றுள்ளது. வண்டுத் தொல்லை இல்லாவிடில், வேர்க்கடலை பயிர் செய்து அவர்கள் செல்வம் பெற்றிருக்க மாட்டார்கள்.

பயிர்களைப் பாழாக்கும் பூச்சிகளை ஒழிப்பதற்குக் கிருமிக் கொல்லிகள் உள்ளன. விளைவைப் பெருக்கவும், மண்ணை வளப்படுத்தவும் இன்று ரசாயனம் வழிசெய்திருக்கிறது. பயிர்களையும், மிருகங்களையும் வளர்க்கவும், களைகளை ஒழிக்கவும் ரசாயனம் இன்று துணை செய்கிறது. கல்லூரிகளும், சோதனைக் கூடங்களும், அரசாங்க ஸ்தாபனங்களும், ரசாயனத் தொழிற்சாலைகளும் இம்முயற்சியில் ஈடுபடுகின்றன. 40,000 க்கு மேற்பட்ட ரசாயனப் பொருட்கள் இன்று அமெரிக்க அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பண்ணை விளைவைப்பெருக்கஅவை பயன்படுகின்றன. பயிர்களுக்குக் கேடு விளைவிக்கும் பூச்சி முதலியவற்றை ஒழிக்கவும் அவை உதவுகின்றன அதனால் உணவுப் பொருட்கள் ஏராளமாகக் கிடைக்கின்

றன; விவசாயப் பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யும் மற்றப் பொருட்களும் கிடைக்கின்றன.

அமெரிக்காவில் சுமார் 82,000 பூச்சி வகைகளும், 2,800 வகை உண்ணிகளும் மனிதருக்கும், பயிர்களுக்கும் மிருகங்களுக்கும் பிரச்னையாக உள்ளன. ஓர் ஆண்டில் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமான பயிர்களை அவை அழித்துவிட முடியும். பல்லாயிரம் ஏக்கர் நிலத்தில் இக் காலத்தில் ஒரே வகைப் பயிர் செய்வது அமெரிக்காவில் வழக்கம். ஆதலால், பூச்சிகளை ஒழிப்பது மிகவும் அவசியம்.

பயிரை அழிக்கும் பூச்சிகள் உலகம் முழுவதுமே பெரிய பிரச்னையாகத்தான் இருக்கின்றன. உலகத்தில் சுமார் 6,36,000 வகைப் பூச்சிகள் உள்ளன. அவை நோய்களைப் பரப்புகின்றன; மனிதனின் உணவைத் தின்றுவிடுகின்றன. டி.டி.டீ. இத்துறையில் பெரு நலன் விளைத்திருக்கிறது. டைபாய்ட் நோய் உண்டாக்கும் கிருமிகளை அது மாய்த்து, 1944-ஆம் ஆண்டில் நேப்பிள்ஸ் நகரத்தில் அந்தக் கொள்ளை நோய் பரவாமல் தடுத்தது. பல இடங்களில் மலேரியாவை உண்டாக்கும் கொசுக்களை அது கொன்றிருக்கிறது. அது வன்மையான கிருமி கொல்லியாக இருந்தாலும், அதனையும் சில. பூச்சிகள் எதிர்க்கக் கூடியவை ஆகிவிடுகின்றன ஆதலால், ரசாயன நிபுணர்கள் வேறு வகைக் கிருமிக் கொல்லிகளைக் கண்டுபிடிக்க முயற்சி செய்கிறார்கள். அவை பூச்சிகளை அழிக்க வேண்டும்; ஆயினும் மனிதர்களுக்கும், ஆடு மாடு முதலியவற்றிற்கும் நஞ்சாகக் கூடாது.

அமெரிக்க ரசாயன நிபுணர்கள் அத்தகைய புதிய கிருமிக் கொல்லிகள் பலவற்றைக் கண்டு பிடித்திருக்கிறார்

தன். அவற்றுள் ஒன்று டிடிவிபி என்பது. அதில் கால் அவுன்ஸ் கிருமிக் கொல்லியைக் கொண்டு ஒரு பெரிய பண்ணையிலுள்ள கொசுக்கள் எல்லாவற்றையும் கிட்டத் தட்ட மாய்த்துவிட்டாதக அமெரிக்கப் பொது சுகாதார இலாகா அறிவிக்கிறது. மெதாக்ஸிக்கிளார் (Methoxychlor) என்னும் புதிய கிருமிக் கொல்லி மனிதருக்காவது மிருகங்களுக்காவது இளம்பயிர்களுக்காவது கேடு விளைப்பதில்லை.

விதைகளில் நோய் தொற்றுதபடி, பூச்சிகளை எதிர்க்கும் கிருமிக் கொல்லிகளை விதைகளிலேயே ஏற்றும் புதிய முறை ஒன்றை அமெரிக்க ரசாயன நிபுணர் கண்டுபிடித்திருக்கின்றனர். அது வளரும் இளஞ் செடிக்குப் பாதுகாப்பளிக்கிறது. பருத்தி, கோதுமை, பார்லி முதலியவற்றிற்கு அவற்றின் விதைகளை விதைக்குமுன் இவ் விதப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

புகை மூட்டும் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. பூச்சிகள் செடிகளின் வேர்களைத் தின்னுமுன் அப்பொருள்களைக் கொண்டு புகை மூட்டி மண்ணிலுள்ள பூச்சிகளை மாய்க்கலாம். அறுத்து வைத்த கதிர்களையும் புகை மூட்டி பூச்சி போக்கிப் பாதுகாக்கலாம்.

களை கொல்லிகளும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வகைக் களை கொல்லியைத் தண்ணீரில் கரைத்துப் பயன்படுத்தினால், அவை செடிகள் நன்றாய் வளரத் துணை செய்கின்றன. 2, 2D என்பது களைகளை மாய்கின்றன.

மனிதனுக்கு உணவுப் பொருள்கள் வேண்டும். அவற்றை விளைவிக்கும் பயிர்களைப் பூச்சிகள் மாய்க்கின்றன. அந்தப் பூச்சிகளை மாய்க்காவிட்டால், மனிதன் தனக்குப் போதிய உணவுப் பொருள் பெற முடியாது.

பூச்சித் தொல்லை பண்டைக்காலம் முதல் இருந்துவரும் பிரச்னை. இன்று ரசாயன அறிவைத் துணையாகக் கொண்டு விஞ்ஞானிகள் பூச்சிகளை ஒழிக்கும் பொருட்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ரசாயன அறிவைப் பயன்படுத்தி அமெரிக்கா தன் விவசாயப் பிரச்னைகளைத் தீர்த்து வருகிறது. அந்த நாட்டில் இன்று விளைவு பெருகியிருப்பதற்கு இது ஒரு காரணம்.

---

## காற்றில் பறக்கும் கார்

தரைக்கு மேலும் தண்ணீருக்கு மேலும் திறந்த வெளியிலெல்லாம் நினைத்தபடி செல்லக்கூடிய புதுவகை வண்டி ஒன்று செய்ய அமெரிக்காவில் கர்ட்டில் ரைட் கார்ப்பரேஷன் கம்பெனி திட்டமிட்டுள்ளது. புதுவண்டி தரையைத் தொடாமலே செல்லும். குறைந்த அமுக்கமும் குறைந்த வேகமுமுள்ள காற்றினால் அது காற்றில் மிதந்த வண்ணம் பறந்து செல்லும். சக்கரம், அச்சு, "பிரேக்கு" "கிளச்சு", சட்டம் முதலிய எதுவும் இல்லாத இப்புது வகைக் கார் 50 முதல் 200 குதிரைத் திறன் வரை உள்ள "பிஸ்டன்" வகை இயந்திரத்தால் இயங்கும். அது தரையிலிருந்து ஆறு அங்குலம் முதல் ஒரு அடி வரை உயரக் கிளம்பி அந்த நிலையிலேயே பிரயாணம் செய்யும்.

# கட்டிடக் கலை

எம். எல். சித்தாலே

கட்டிடக் கலையில் அமெரிக்கா படிப்படியாக முன்னேற்றம் அடைந்து வந்திருக்கிறது. அக் கலைக்கு அமெரிக்கா செய்துள்ள இணையற்ற பணி ஒன்றுஉண்டு. அது இக்காலத்தில் அமெரிக்கா கட்டியுள்ள வானளாவும் மாபெருங் கட்டிடங்களே. எதனையும் மிகப் பெரிய அளவில் செய்யவேண்டும் என்பதே அமெரிக்காவின் எண்ணம். கட்டிடத் துறையிலும் அந்தக் கொள்கையையே அது கடைப்பிடித்து வருகிறது. விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால், மாபெருங் கட்டிடங்கள் கட்டுவது சாத்தியமாயிற்று.

விரைவாகக் கட்டிடங்களைக் கட்டி முடிக்கவும் அமெரிக்கா வழி காட்டியுள்ளது. கட்டிடத்துக்கு வேண்டிய ஒவ்வொரு பகுதியையும் ஒன்றுபோல ஏராளமாகச் செய்து வைத்து, கட்டிடம் அமைக்கவேண்டியபோது, எல்லாப் பகுதிகளையும் விரைவாகப் பொருத்தி, முழுக் கட்டிடம் ஆக்கி விடுகிறார்கள். ஒரே விதமாக ஏராளமாக உற்பத்தி செய்வதே அமெரிக்க முறை. அம்முறை கட்டிட அமைப்பிலும் கையாளப்படுகிறது.

அற்புதக் கூடாரம்

விதானக் கூடாரம் ஒரு விந்தையான இயந்திர அமைப்பு. அதன் அமைப்பை எழுதிக் கொடுத்தவர் பக்மின்ஸ்டர் புல்லர் என்பவர். அது சம அளவுள்ள முக்

கோணங்களால் அமைக்கப் பெறும் விதானமாகும். தமது அமைப்பு வடிவத்தைத் துணையாகக் கொண்டு மிகப் பெரிய விதானங்களை அமைக்க முடியும் என்பது அவரது நம்பிக்கை.

நியூயார்க்கிலும் சிக்காகோவிலும் உள்ள வானளாவும் கட்டிடங்கள் அமெரிக்கா கட்டும் மாபெருங் கட்டிடங்களுக்கு உதாரணம். அவற்றின் படங்களை உலகமெங்கும் பார்க்கலாம்; பத்திரிகைகளில் காணலாம். எனினும் அமெரிக்காவில் உள்ளவர்கள் எல்லாரும் இந்தப் பெரிய கட்டிடங்களில் வாழவில்லை.

அமெரிக்காவில் மனங்கவரும் அழகிய வீடுகளையும் அலுவலகங்களையும் அமைத்துக் கொடுத்தவர்கள் பிராங்க் லாயிட் ரைட், பேராசிரியர் லட்விக் மீஸ் என்போர். அவர்கள் கட்டியவை நியூயார்க் வான்முட்டிகள் போன்றவை அல்ல; அவை சிறியவை, அழகு மிக்கவை. உலகிற்கு அவை பற்றி அதிகம் தெரியாது.

புகழ் கண்ட கலைஞர்கள்

தற்கால அமெரிக்கக் கட்டிடக் கலையின் புகழை நிலை நாட்டியவர்கள் அவர்களே. பிராங் லாயிட் ரைட் நியூயார்க் நகரின் மாபெரும் அரும்பொருள் களஞ்சியத்தைக் கட்டும் வேலையை முடிக்குமுன் அண்மையில் காலமானார். பேராசிரியர் லட்விக் மீஸ், ராயல் பொன் பதக்கம் பெற்றவர். இவரது கலை நுட்பமும் உலக முழுவதும் கட்டிடக் கலையில் விளங்குகிறது.

மனித உடற்கூற்றையும், இயற்கையையும், இயற்கைக் காட்சியையும் தழுவி லாயிட் ரைட் தமது கட்டிடக் கலையை உருவாக்கினார். இயற்கையும் தொழில் நுட்பமும் கலந்து அமைந்தவை அவருடைய கட்டிடங்

கள். விஸ்கான்ஸினிலுள்ள ஜான்ஸன் வாக்ஸ்கம்பெனிக் காக அவர் கட்டிய வானளவும் மாளிகை மனிதனின் முதுகெலும்பைப் போல அமைக்கப்பெற்றதாகும்.

கட்டிடக் கலையைப் பற்றிய அவரது தத்துவமும் முக்கியமானது. ''கட்டிடக் கலை செங்கல்லைச் செங்கல்லாக வும், எஃகை எஃகாகவும், கண்ணாடியைக் கண்ணாடியாக வும் காணவேண்டும்'' என்று அவர் சொன்னார். ''ஒரு பாங்குக்கு கட்டிடம் கட்டினால், அதைப் பார்த்தவுடன் அது ஒரு பாங்கு என்று தெரியவேண்டும்; இருப்புப் பாதை நிலயம் இருப்புப் பாதை நிலயமாகத் தோன்ற வேண்டும், அது ஒரு பழங்காலத்துக் கோயில் போல இருத்தலாகாது'' என்பது அவரது கருத்து.

தாஜ் மஹால்

ரைட், மீஸ் ஆகிய இருவருமே கட்டிட அமைப்பில் புதிய நாகரிகத்தைப் புகுத்தினர். சமூக, பொருளாதார நிலைமைகள் மாற மாற, கட்டிட நாகரிகமும் மாறும்; அழகைப் பற்றி அந்தந்தக் காலத்துக்கே உரித்தாகவுள்ள கருத்தும், தேவைகள் மாற மாற மாறுதல் அடையும். ஆதலால், நிலையான அடிப்படையில் கட்டிட முறை அமைக்கப்படுதல் நன்று. ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால் இன்றும் மாண்புமிக்க கட்டிடமாகத் திகழ்கின்றது. ஒரு கட்டிடம் தாஜ்மஹாலைப் போல என்றும் புகழ் பெற்று விளங்க வேண்டுமாயின் அதன் அளவு வீதம் சரியாய் இருக்கவேண்டும். அதன் தரமும் இந்தியக் கோயில்கள் மசூதிகள் ஆகியவற்றின் தரத்தைப் போன்றதாக இருக்க வேண்டும்.

நகர வாழ்க்கை நிலை மாறும்போது, வானளாவும் பெருங் கட்டிடங்களுக்கு மதிப்பு இருக்குமா இல்லையா என்பது பற்றி இப்பொழுது சொல்ல முடியாது. என்ன

தான் நேர்ந்தாலும், இந்த உயரமான கட்டிடங்கள் கட்டுவதற்குப் பயன்பட்ட என்சினியரிங் திறமையையும், தொழில் நுட்பத்தையும் மக்கள் மதிக்காமல் இருக்கமுடியாது. அந்தத் திறமையும் தொழில் நுட்பமும் மக்களுக்கு எக் காலத்திலும் நலன் விளைக்கும்.

உயர்ந்த பெரிய கட்டிடங்கள் கட்டிய பெருமை முக்கியமாக அமெரிக்கரைச் சேரும். லாயிட் ரைட் என்பவரின் திறமையும், பேராசிரியர் மீஸ் கண்ட அழகு நுணுக்கமும் உலகம் அனைத்துக்கும் நலன் விளைக்கவேண்டும்.

---

### லண்டனில் இந்திய உணவு

லண்டனில் சுமார் 150 இந்தியர்—பாக்கிஸ்தான் உணவு விடுதிகள் உண்டு. மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று வீதம் அவற்றின் எண்ணிக்கை பெருகி வருகிறது. இந்திய உணவுகள், ஆங்கில உணவுகளை விடமலிவாகக் கிடைக்கின்றன. இந்திய உணவுகளில் புலாவும் பிரியாணியும் பிரசித்தமானவை நாலு ஷில்லிங் (இரண்டரை ரூபாய்), கொடுத்தால் ஒரு பொட்டணம் புலாவ் கிடைக்கும். இந்தியாவில் வசித்த பல ஆங்கிலேயர்கள் தங்களுடைய அனுபவங்களை எண்ணி மகிழும் விருப்பத்தில் இந்திய உணவுச் சாலைகளுக்குச் செல்கின்றனர். என்று "டெயிலி டெலிகிராப்' பத்திரிகையில் அதன் உணவுத்துறை நிபுணர் எழுதுகிறார்.

# லண்டன் தானியச் சந்தை

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, லண்டனில் தானியச் சந்தை ஏற்பட்டது. மற்றச் சந்தைகளைப் போலவே, இதுவும் சிறுகச் சிறுக வளர்ந்து, சர்வதேச அந்தஸ்தைப் பெற்றுவிட்டது. அந்தக் காலத்தில் லண் டனிலுள்ள ஓர் சத்திரத்தில் வெளியூர் விவசாயிகள் கூடு வது வழக்கம். தங்களிடமுள்ள தானியத்தை விற்க சத் திரத்தின் சொந்தக்காரனுடைய உதவியை நாடுவார்கள். அதற்காக அவனுக்கு தரகு கூலி கொடுப்பார்கள். நாளா வட்டத்தில் இந்த இடம் பிரபலமாகிவிட்டது.

கப்பல் வாணிபம் பெருகிய பிறகு, தானியச் சந்தை யிலும், வியாபாரம் பெருகிற்று. தேம்ஸ் நதிக்கரையில் மார்க் லேன் என்ற குறுகிய தெருவில் இச் சந்தை இருக் கிறது. சென்ற போரில், எதிரிகள் குண்டு வீச்சால், இந்தக் கட்டிடம் நாசமடைந்தது. 1953-ஆம் ஆண்டில் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. இந்தக் கட்டிடத் திற்கு பழைய சந்தை வழியாக வருவதற்கு ஒரு வாசலும் சீதிங் தெரு வழியாக நுழைய ஒரு வாசலும் உண்டு. தானியச் சந்தையில் உள்நாட்டில் விளையும் தானியங் களும், பயறு வகைகளும், மாவு முதலிய பண்டங்களும் தீவனப் பொருள்களும், எண்ணெய் வித்துக்களும், வைக் கோல், எரு முதலிய பொருள்களும், விதைத் தானியங் களும் விற்கப் பெறுகின்றன.

பிரிட்டனிலேயே மிகப் பெரிய தரகுச் சந்தை இது. லண்டனைச் சேர்ந்தவர்களும், வெளியூர்க்காரர்களுமாக

சுமார் 2200 பேர் இதில் அங்கம் வகிக்கிறார்கள். தானிய வியாபாரிகளும் மாவுமில் உரிமையாளர்களும் செக்காலைச் சொந்தக்காரர்களும், எரு விற்பனையாளர்களும், இன்ஷ்யூரன்ஸ் தரகர்களும் இதில் சேர்ந்து தொழில் நடத்தி வருகிறார்கள். வியாபாரிகளில் சிலர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தையில் இறக்குமதிப் பொருள்களை விற்பனை செய்யும் பிரிவு, உள்நாட்டுப் பொருள்களை விற்பனை செய்யும் பிரிவு என்று இரண்டு உண்டு. கானடா, ஆஸ்திரேலியா, இந்தியா, பாக்கிஸ்தான், கனு, நைஜீரியா, கிழக்கு ஆப்பிரிக்கா, அர்ஜன்டைனு முதலிய நாடுகளிலிருந்து வரும் பல பொருள்களை இந்தச் சந்தையில் காணலாம். தானியச் சந்தை வியாபாரிகள் பல பொருள்களை விற்பனை செய்வதில்லை. குறிப்பிட்ட பொருள்களில் மொத்த வியாபாரம் செய்வதில் அக்கறையுள்ளவர்கள். இவர்கள் வெளிநாட்டு வியாபாரிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, தங்களுக்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்வதும் உண்டு. லண்டனிலுள்ள பால்டிக் சந்தையிலிருந்து தேவையான பொருள்களை கொள்முதல் செய்வதுமுண்டு. கப்பலிலுள்ள சரக்குகளை மொத்தமாக விலை பேசி, கொள்முதல் செய்து, மற்ற வியாபாரிகளுக்குப் பிரித்துக் கொடுக்கும் மொத்த வியாபாரிகள், சர்வ தேசப் புகழ்பெற்ற பால்டிக் சந்தையில் தொழில் நடத்துகிறார்கள்.

உள்நாட்டுப் பொருள்களை வியாபாரம் செய்பவர்கள் கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தொழில் நடத்துகிறார்கள். விவசாயிகளிடமிருந்து தானியத்தையும் மற்றப் பொருள்களையும் வாங்குகிறார்கள். தானியச் சந்தையிலிருந்து தீவனப் பொருள்களையும்

எரு முதலியவற்றையும் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறார்கள்.

லண்டனிலுள்ள மற்றச் சந்தைகளைப் போல தானியச் சந்தையிலும் வாய்மொழியாகவே வியாபாரம் நடக்கிறது. அங்கு நம்பிக்கைக்கும் நாணயத்துக்கும் முதலிடம் தரப்படுகிறது.

லண்டன் தானியச் சந்தையின் வாணிப முறைகளைப் பிறநாட்டுச் சந்தைகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. லண்டன் வியாபாரிகள் மாதந்தோறும்கூடி தர நிர்ணயம் செய்கிறார்கள். அதை உலகின் பிற பாகங்களில் உள்ள சந்தைகள் ஏற்றுக் கொள்கின்றன. லண்டன் தானிய வியாபாரிகள் நேர்மையுடனும் கட்டுப்பாடுடனும் தொழில் நடத்துவதால்தான், லண்டன் தானியச் சந்தை உலகப் புகழ் பெற்றது.

---

Edited, Printed and Published by A. K. CHETTIAR at Kumari Malar Press, 100, Mowbrays Road. Madras-18

# கவுண்டர் & கம்பெனி
## (பிரைவேட்) லிமிடெட்

| தலைமை ஆபீஸ்: | கிளை ஆபீஸ் & ஷோரூம் |
| --- | --- |
| கூட்ஸ் ஷெட் ரோடு | 7/69, ஜெயில் ரோடு |
| பொள்ளாச்சி. | கோயமுத்தூர் |

## கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

**நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,**

மானேஜிங் டைரக்டர்.

## குமரி மலர் வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மலேயா முதல் கானடா வரை | ரூ. | 2 – 50 |
| 2. | அமெரிக்க நாட்டில் | ” | 5 – 00 |
| 3. | கரிபியன் கடலும் கயானாவும் | ” | 4 – 00 |
| 4. | உலகம் சுற்றும் தமிழன் | ” | 2 – 00 |
| 5. | பிரயாணக் கட்டுரைகள் | ” | 1 – 50 |
| 6. | அண்டை நாடுகள் | ” | 0 – 90 |

வெளிவந்துவிட்டன.

●

ஐரோப்பா வழியாக

விரைவில் வெளிவரும்.